DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H. Selvanayagam, Broker
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
Ragu Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703
உதயம் 1275
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday September 11, 2020

# ஒட்டாவா நோக்கிய நீண்ட நடைப் பயணத்தில் நேற்றிரவு 361 கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்த நடைப் போராளிகளின் நால்வரின் வேண்டுகோள்

## தற்போது நடைபெறும் ஒட்டாவா பாராளுமன்றம் நோக்கிய நீதிக்கான நெடும் பயணத்தின் இறுதிநாளில் அனைவரும் கலந்து கொள்ளவேண்டும்




இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்காக நீதிகோரி, கனடியத் தமிழர்களினால் நடாத்தப்படும் நீதிக்கான நெடும் பயணம் நிறைவுறும் நாளின் ஒட்டாவா பாராளுமன்ற வளாகம் முன்பாக கனடா வாழ் தமிழ் மக்கள் அனைவரையும் அன்பாக அழைக்கின்றார்கள் மேற்படி நெடும் பயணத்திற்கான ஏற்பாட்டுக் குழுவினரும் நான்கு நடைப்போராளிகளும்.

மேற்படி இறுதி நிகழ்வில் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது எதிர்வரும் 09-14-2020 திங்கட்கிழமை, ஒட்டாவா கால்ரன் பல்கலைக் கழகத்திலிருந்து காலை 11 மணிக்குத் ஆரம்பமாகும் நடை பயணம் 12:30 க்கு பாராளுமன்றத்தைச் சென்றடையும்.

மேற்படி நிகழ்வில் தமிழ்த் தேசிய அமைப்புகள், ஊர்ச் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள், மாணவர் அமைப்புகள், விளையாட்டு கழகங்கள், தமிழ் ஊடகவியலாளர்கள், முதியோர் சங்கங்கள் அனைவரும் கலந்து கொண்டு தங்கள் வரலாற்றுக் கடமையைச் செய்யுமாறு, சகோதரபாசத்துடன், இருகரம் கொண்டு வேண்டுகின்றார்கள்.

14 ந் திகதி திங்கட்கிழமை காலை 5:30 மணிக்கு ரொறன்ரோவில் இருந்தும், மொன்றியாலில் இருந்தும் காலை 8 மணிக்கும் பேருந்துகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

பேருந்து தொடர்புகட்கு:
கண்ணன்:- 647-808-7766 தேவாசபாபதி:-647-975-0524
ஜெரோம் (மொன்றியால்):- 514-914-3099,
விமல் நவரட்ணம்:- 416-399-3449. திரு:- 416-893-9545
திருமலைச் சந்திரன்:- 647-302-9243 குமார்:- 416-454-5646
திரு. ஈழவேந்தன் ஐயா: 416-519-7165

நீண்ட நெடும் பயணத்திற்கு உதவ விரும்புவோர் தொடர்புகட்கு குமுதினி- 647-7821-977
(உள்ளே விபரமான செய்தி)

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX Realtron Team

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

உங்கள் இல்லங்கள் அல்லது பண்ணை வீடுகள் ஆகியவற்றில் அழகிய முறையில் திருத்த வேலைகளைச் செய்து கொள்ள எம்மை அழையுங்கள்
Interior: Staircase Refinishing/Installation - Flooring Refinishing /Installation
Bathroom/Kitchen/Basement Renovations Additions & Extensions
Exterior : Fence/Interlock/Deck.
ZY RENOVATION
ZY-Renovation Call: Ethan @ 647 995 5955

# MORTGAGE SOLUTIONS

# $50,000 EQUITY LOAN

## GET APPROVED WITHIN 24 HOURS

## 416.298.2777

# $375 Mo.

www.mortgageSolutions.ca

## MONTHLY SAVING $2,478

## SAVE UPTO 75% REFINANCE



**KIRUBA THANABALASINGHAM**

Mortgage Agent Lic# M12002440
Ultimate Mortgage Group Lic 11995
info@mortgageSolutions.ca
Off: 416.298.2777
Dir: 416.894.9122

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.39% | | $1,563.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,563.00 |

# MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC IJ2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# தாயகத்திலும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் போதைப்பொருள் பாவனையிலிருந்து தமிழ் சமூகத்தை பாதுகாப்பது அவசியம்

இலங்கையில் இனவாதப் பிடிக்குள் அகப்பட்டுக் கிடந்த எமது தமிழினம், வடக்கிலும் கிழக்கிலும் அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தை கையிலெடுத்த போது தென்னிலங்கை இனவாதிகளும் இலங்கை இராணுவமும் முற்றிலும் எதிர்பாராத வகையில் தங்களைப் பாதுகாக்கவே மிகுந்த பிரயாசைப்பட்டார்கள்.

பல்வேறு நெருக்கடிக்கடிகள் மற்றும் அடக்கு முறைகள், மற்றும் இனரீதியான வேறுபாடுகள் போன்றவை எம்மில் இலட்சக் கணக்கான உறவுகளை நாம் இழக்க வேண்டி வந்தது. இதனால் புலம் பெயர்ந்த நாடுகளுக்கு எமது மக்கள் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானார்கள்.

இவ்வாறாக புலம் பெயர்ந்த நாடுகளில் எத்தனையோ ஆண்டுகள் கடந்த வலுவுள்ள சமூகமாக அடித்தளத்தை அமைத்துக் கொண்ட எமது ஈழத் தமிழ் மக்கள் பல்வேறு துறைகளில் முன்னேறினார்கள். விடுதலைப் போராட்டம் உக்கிரமாக நடந்து கொண்டிருந்தபோது விடுதலை இயக்கத்தின் ஆயுத பலத்தை உறுதியாக்குவதற்கு உதவியவர்களில் புலம் பெயர் தமிழர்கள் முன்னணியில் இருந்தார்கள்.

ஆனால் தற்போது புலம் பெயர்ந்த நாடுகளில் எமது சமூகத்தை இன்னொரு வகையான நச்சுப் பொருள் தாக்கத் தொடங்கியது. அது தான் 'போதைப் பொருள் பாவனை. இந்த கொடிதான நஞ்சின் பிடியியிலிருந்து சமூகத்தை பாதுகாக்கும் பொறுப்பை புலம் பெயர்நாடுகளில் எமது சமூகம் சார்ந்த அமைப்புக்கள் எற்றுக் கொள்வதாகத் தெரியவில்லை.

கனடா போன்ற நாடுகளில் போதைப் பொருட்களின் விற்பனை அரசாங்கத்தின் அங்கீரகாரத்தோடு மருத்துவத்திற்கான பாவனை என்ற அடிப்படையில் திறந்த கடைகளில் கிடைக்கின்ற அளவிற்கு உள்ளதால் மக்கள் திகைத்த வண்ணம் உள்ளார்கள். பெற்றோர்கள் அச்சத்தின் உச்சத்திற்குச் சென்றுள்ளார்கள். காரணம் அண்மைக் காலங்களில் கனடாவில் பல தமிழ் பேசும் இளைஞர்களும் திருமணமானவர்களும் போதைப் பொருள் பாவனையின் உச்சத்திற்குச் சென்று மரணத்தைத் தழுவியுள்ளார்கள். இன்னும் சிலர் போதைப் பொருள் பாவனை மற்றும் விற்பனை ஆகியவற்றில் ஈடுபட்ட காரணத்தால் ஏற்பட்ட கருத்து வேற்றுமைகள் மற்றும் பகை ஆகியவற்றின் காரணத்தால் உயிரிழக்க வேண்டி வந்த சில சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

ஆனாலும் பொருளாதாரத்திலும் கல்வியிலும் அரசியலிலும் முன்னேற்றங்களைக் கண்ட எமது புலம் பெயர் தமிழர் சமூகம் எமது சமூகத்தில் போதைப் பொருள் பாவனையால் சீரழியும் இளைஞர்களை மீட்டுவர முன்வரவில்லை. இது ஒரு கவலைக்குரிய விடயமாகும்.

ஆனால் எமது தாயகத்தில் ஒரு தமிழ் அரசியல்வாதி இந்த முயற்சியில் இறங்கி எமது வடக்கு கிழக்கு இளைஞர்களை பாதுகாக்க வேண்டும் என்று குரலெழுப்பியுள்ளார். இது வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும்.

இவ்வாறு இலங்கையில் தமிழ் இளைஞர்களை காப்பாற்ற வேண்டும் என்று குரல் எழுப்பியுள்ளவர், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரி.கலையரசன் ஆவார்.

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிராந்தியத்தில் பணியாற்றிய உலக தரிசனம் நிறுவனத்தின் அபிவிருத்தி வேலைத்திட்ட நிறைவு விழா நேற்று வியாழக்கிழமை நாவிதன்வெளி கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர்,

இன்று பெரியவர்களை விட சிறியவர்கள் அதிகளவில் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகி சமூகத்தை சீரழிக்கும் நிலை உருவாகிவிட்டது. இதனை இல்லாமல் செய்ய வேண்டும்.

இந்தப் பொறுப்பை இளைஞர்கள் மற்றும் சமூகத்தலைவர்கள் கையிலெடுப்பது அவசியம்.

இல்லையென்றால் தமிழ்ச் சமூகம் அழிந்து விடும் அபாயம் தூரத்தில் இல்லை என்றார். துாயகத்தில் ஒரு முன்மாதிரியாக விளங்கும் இந்த தமிழ் அரசியல்வாதியைப் பின்பற்றி புலம் பெயர்ந்த நாடுகளிலும் எமது சமூகம் சார்ந்த பிரதிநிதிகள் முன்வந்து எமது தமிழ் இளைஞர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று நாம் வேண்டுகின்றோம்.

GHURUS TOWING
Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire
We pay scrap up to $1000

NIRMALAN (ROGER):
(416) 990-7777
(416) 984-7777

COMPUTER REPAIR
Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.
VARUNAN:
(416) 894-6244

சுவையான LUMP PUTTU & LUMP RICE
சனி ஞாயிறு ஆகிய தினங்களில் Morningside & Sheppard சந்திப்புக்கு அருகில் நீங்கள் விரும்பும் சுவையான Lump Puttu மற்றும் Lump Rice ஆகியன கிடைக்கும்.
Take Out and Catering சேவைகளும் உண்டு.
Call:
(416) 832-6345

SPOKEN ENGLISH
100% உத்தரவாதம்!
ஆங்கிலம் எதுவும் கதைக்கமுடியாதவர்கள் 2 மாதத்தில் சரளமாக பேச முடியும்
Letter writing, Essay writing, Citizenship exam preparation மற்றும் IELTS preparation.
நம்பிக்கையுடன் அழையுங்கள்
துஸ்யந்தி:
(647) 606-1009

## மிசிசாகா நகர மேயர் பாராட்டிய தமிழ் பேசும் இளம் கின்னஸ் சாதனையாளர் சங்கவி ரதன்



கடந்த மாதம் கனடா மிசிசாகா நகரில் செல்வி சங்கவி ரதன் அவர்கள் ஒரு கையால், 55 நிமிடங்களில் 30 Rubik's Cube களை தனித்தனி நிறங்களை ஒழுங்குபடுத்தி ஏற்கெனவே உள்ள கின்னஸ் சாதனையான 25 Rubik's Cube சாதனையை முறியடித்தமைக்காக மிசிசாகா மேயர் Bonnie Crombie அவர்களால் பாராட்டு பெற்றார்.

உள்ளங்கள் இணையட்டும்.. உறவுகளாய்.....
செந்தியின் தமிழன் வழிகாட்டி வழங்கும்
www.tamilsguidemartimony.com
தமிழன் வழிகாட்டியின் கலியாணசேவை

TM TAMILS' GUIDE MATRIMONY
Canada: 416-615-4646 Sri Lanka: 011-94-777-922-265

# தற்போது நடைபெறும் ஒட்டாவா பாராளுமன்றம் நோக்கிய நீதிக்கான நெடும் பயணத்தின் இறுதிநாளில் அனைவரும் வருக!

இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்காக நீதிகோரி, கனடியத் தமிழர்களினால் நடாத்தப்படும் நீதிக்கான நெடும் பயணம் நிறைவுறும் நாளின் ஒட்டாவா பாராளுமன்ற வளாகம் முன்பாக கனடா வாழ் தமிழ் மக்கள் அனைவரையும் அன்பாக அழைக்கின்றார்கள் மேற்படி நெடும் பயணத்திற்கான குழுவினர்.

**காலம்:** செப்ரம்பர் 14,2020 திங்கட்கிழமை
**இடம்:** ஒட்டாவா கால்ரன் யூனிவசிற்றியில் இருந்து காலை 11 மணிக்குத் தொடங்கும் பயணம் 12:30க்கு பாராளுமன்றத்தைச் சென்றடையும்.







அன்பான கனடியத் தமிழ் மக்களே! பிறம்ரன், மொன்றியால் மாநகரங்களில் இருந்து கனடாப் பாராளுமன்றத்தை நோக்கி நெடும் நடைபோ-டும் நீதிக்கான நெடும்பயணத்தில் அனைத்துத் தமிழ் உள்ளங்களும் தவறாது கலந்து, நம் தாயக உறவுகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுப்பது நம் வரலாற்றுக் கடமை!

குறிப்பாக,தமிழ்த் தேசியத்திற்காகப் பாடுபடும் அமைப்புகள், ஊர்ச்சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள், மாணவர் அமைப்புகள், விளையாட்டு கழகங்கள், தமிழ் ஊடகவியலாளர்கள், முதியோர் சங்கங்கள் அனைத்தையும் தங்கள் வரலாற்றுக் கடமையைச் செய்யுமாறு, சகோதர பாசத்துடன், இருகரம் கொண்டு வேண்டுகின்றோம். 14ந் திகதி திங்கட்கிழமை காலை 5:30 மணிக்கு ரொறன்ரோவில் இருந்தும், மொன்றியாலில் இருந்து காலை 8 மணிக்கும் பேருந்து வண்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

**தொடர்புகட்கு:**
**நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், கனடியத் தமிழர் தேசிய அவை, மொன்றியால் தமிழர் அமைப்பு, நாம் தமிழர் அமைப்பு, தமிழ்த் தாய் மன்றம், ஒட்டாவா தமிழ்ச் சங்கம், பிறம்ரன் தமிழ்ச் சங்கம், டூறம் தமிழ்ச் சங்கம், அறத்தமிழ்ச் சங்கம்**

**பேருந்து தொடர்புகட்கு:**
**கண்ணன்:** (647) 808-7766 **தேவாசபாபதி:** (647) 975-0524
**ஜெரோம் (மொன்றியால்):** (514) 914-3099
**விமல் நவரட்ணம்:** (416) 399-3449 **திரு:** (416) 893-9545
**திருமலைச் சந்திரன்:** (647) 302-9243
**குமார்:** (416) 454-5646 **திரு. ஈழவேந்தன் ஐயா:** (416)519-7165
**நீண்ட நெடும் பயணத்திற்கு உதவ விரும்புவோர் தொடர்புகட்கு:**
**குமுதினி:** (647) 782-1977

MONEY PROBLEMS?™ ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்

உங்களைக் கேளுங்கள்?



- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்

Scarborough / Downtown Toronto: 416-489-2000
Mississauga / Brampton: 416-650-5400





| Scarborough | Toronto/Downtown | North York | Mississauga | Brampton |
|---|---|---|---|---|
| 201-4433 Sheppard Ave. E | 800-120 Eglinton Ave. E | 306-1280 Finch Ave. W | 110-93 Dundas Street E. | 201-7990 Kennedy Rd. South, |
| Scarborough, ON, M1S 1V3 | Toronto, ON, M4P 1E2 | North York, ON, M3J 3K6 | Mississauga, ON, L5A 1W7 | Brampton, Ontario, L6W 0B3 |

Mark Shamly
Tamil Consultant

Proudly Served over 15,000 clients since 2004
Visit : GtaCredit.Com

Ajay Oberoi
Experienced Credit Counsellor

இலங்கை செய்திகள்

# முல்லைத்தீவில் ஆயுதங்கள் இருப்பதாக தோண்டப்பட்ட காணியில் எதுவும் கிடைக்கவில்லை



ஆயுதங்கள் இருப்பதாக நீதிமன்ற உத்தரவுக்கமைய தோண்டப்பட்ட போதும் ஒன்றும் கிடைக்கவில்லை.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசத்திற்குட்பட்ட சாலை பகுதியில் விடுதலைப் புலிகளால் புதைத்து வைத்து உள்ளதாக நம்பப்படும் வெடி பொருட்கள் இருப்பதாக சிறப்பு அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து குறித்த பகுதியில் தோன்றும் நடவடிக்கையில் சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் நீதிமன்ற, மற்றும் அரசு நிர்வாகங்கள் நேற்று 09.09.20 மேற்கொண்டுள்ளார்கள்.

குறித்த பகுதியில் தோண்டப்பட்ட போது எவ்வித தடயங்களும் இல்லாத நிலையில் தோண்டும் நடவடிக்கையை கைவிட்டு கொண்டுள்ளார்கள்.



# திலீபனின் நினைவுதினம் அனுஸ்டிக்க வவுனியா பொலிஸ் அனுமதி மறுப்பு

- ஜெகதீஸ்வரன் டிஷாந்த்



5 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து நீராகாரமின்றி மரணித்த விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகளில் ஒருவரான தியாகி திலீபனின் நினைவு தினத்தினை அனுஸ்டிப்பதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி வவுனியா பொங்குதமிழ் தூபிக்கு முன்பாக இருந்து நல்லூர் வரையில் பேரணியொன்றினை நடத்துவதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது.

இந்நிலையில் வவுனியா நகரசபை உறுப்பினரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. மக்கள் முன்னணியின் முக்கியஸ்தரும் குறித்த நிகழ்வின் ஏற்பாட்டாளருமான, ஜானுஜன் பொலிஸில் அனுமதி பெற முற்பட்ட நிலையில் அதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விடயத்தினை உறுதிப்படுத்திய நகரசபை உறுப்பினர் ஜானுஜன் இவ்விடயம் தொடர்பில் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றினை செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# 10 நாடுகளுக்கான தூதுவர்களை திருப்பி அழைக்கிறது இலங்கை வெளியுறவு அமைச்சு!




10 நாடுகளில் உள்ள இலங்கை இராஜதந்திரிகளை திருப்பி அழைத்துக் கொள்ள வெளியுறவு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

60 வயதுக்கு மேல் தூதுவர்களாகப் பணியாற்றும் இராஜதந்திரிகளை திருப்பி அழைத்துக் கொள்ள வெளியுறவு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக, அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் உள்ள ஐ. நாவுக்கான நிரந்தரப் பிரதிநிதி, கனடா, சுவிடன், எகிப்து, கியூபா, மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளில் உள்ள தூதுவர்களையே திருப்பி அழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்றும், சேவையில் இருந்து விலகிக் கொள்ளுமாறு இவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது

# கோப்பாயில் தியாகி திலீபன் நினைவேந்தலுக்கு தயாராகிறது "மணிவண்ணன்" அணி

கோப்பாயில் தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபி இடித்து அழிக்கப்பட்ட இடத்தில், நினைவேந்தல் நிகழ்வை நடத்த திட்டமிட்டுள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நினைவேந்தல் பிரிவு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பாத்திபன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் விளையாட்டு துறை பொறுப்பாளர் வீரா ஆகியோர் நேற்று மாலை ஊர் மக்களுடன் கலந்துரையாடினர்.

இதன்போது அங்கு இந்த முறை நினைவு தின நிகழ்வுகளை நடத்துவதற்கு எற்படுகளை செய்து தருமாறு மக்கள் கேட்டுக்கொண்டனர்.

அதன் அடிப்படையில் ஊர் மக்களுடன் இணைந்து தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை அங்கு நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நினைவேந்தல் பிரிவு அறிவித்துள்ளது.



# மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் படுகொலை நினைவஞ்சலி!



மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் படுகொலையின் 30வது ஆண்டு நினைவு தினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக சத்துருக்கொண்டான் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியருகே இந்த நினைவேந்தல் நிகழ்வு இன்று புதன்கிழமை மாலை நடைபெற்றது.

படுகொலைசெய்யப்பட்ட உறவுகளின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள், அரசியல்வாதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

இதன்போது நினைவுத்தூபியில் நினைவுச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதை தொடர்ந்து, உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திக்கான பிரார்த்தனைகளும் முன்னெடுக்கப்பட்டன.

கடந்த 1990ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09ஆம் திகதி இராணுவத்தினருடன் இணைந்து ஊர்காவல் படையினரால் சத்துருக்கொண்டான், கொக்குவில், பிள்ளையாரடி கிராமங்களைச் சேர்ந்த கர்பிணித் தாய்மார்கள், பச்சிளம் குழந்தைகள், அங்கவீனம் அடைந்தவர்கள் என பலர் கொண்டுசெல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.



இதில் 5 கைக்குழந்தைகள், 42 பத்து வயதுக்கு குறைவான சிறுவர்கள், 85 பெண்கள், 28 முதியவர்கள் உட்பட 186 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

# டொராண்டோ சர்வதேச தமிழ் திரைப்பட விழாவில் "தட்றோம் தூக்றோம்" திரைப்படம் வெளியீடு




மீடியா மார்ஷல் தான் தயாரித்த *தட்றோம் தூக்றோம்* என்ற தமிழ் திரைப்படம் டொராண்டோ சர்வதேச தமிழ் திரைப்பட விழாவில் திரையிட தேர்ந்தெடுக்கபட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்து கொள்கிறது. "தட்றோம் தூக்றோம்" 2016ம் வருடம் இந்திய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட ரூ500 மற்றும் ரூ1000 நோட்டுக்கள் பணமதிப்பு இழப்பை மையப்படுத்தி தயாரிக்கபட்ட கற்பனை கலந்த திரைப்படம். இதில் வெற்றிமாறன் இயக்கத்தில் வெளிவந்த அசுரன் திரைப்படத்தில் தனுீன் மூத்த மகனாக நடித்த தீ ஜெய் கதநாயகனாக நடித்துள்ளார். அவருக்கு ஜோடியாக புதுமுக நாயகி பௌசி நடித்துள்ளார். மேலும் இந்த படத்தில் சீனு மோகன், காளி வெங்கட், லிங்கா, மாரிமுத்து, ஒளிப்பதிவாளர் சக்தி சரவணன் மற்றும் பலர் நடித்துள்ளனர். கபிலன் வைரமுத்து வசனம் பாடல்கள் எழுத புதுமுக இயக்குநர் அருள் ஞ இந்த படத்தை இயக்கியுள்ளார். படத்திற்க்கு பாலமுரளி பாலு இசை அமைக்க சிலம்பரசன் படத்தின் மிக முக்கியமான கபிலன் வைரமுத்து எழுதிய பணமதிப்பிழப்பு பாடலை பாடியுள்ளார். படத்தின் டிரெய்லர் ஏற்கனவே இணைய தளத்தில் வெளியிடபட்டு பத்து லடசம் பார்வையாளர்களுக்கு கடந்துவிட்டது குறிப்பிடதக்கது. படம் தணிக்கை குழுவினரால் தணிக்கை செய்யப்பட்டு U/A சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது, இந்த கொரோனா நேரத்தில் இந்த படம் டொராண்டோ சர்வதேச தமிழ் திரைப்பட விழாவில் தேர்ந்தெடுக்கபட்டிருக்கும் செய்தி படக்குழுவினருக்கு மிகுந்த உற்சாகத்தை அளிக்கிறது, இந்த பட விழாவில் தேர்ந்தெடுத்ததற்க்கு டொராண்டோ சர்வதேச தமிழ் திரைப்பட விழா குழுவினருக்கும் மற்றும் அனைவருக்கும் மீடியா மார்சல் மனமார்ந்த நன்றியை தெறிவித்து கொள்கிறது. தட்றோம் தூக்றோம் விரைவில் தியேட்டர்களில் வெளியிடப்படும் என்பதை தெறிவித்து கொள்கிறோம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

# இந்தியா பதின்மூன்றாவது திருத்தத்தை பாதுகாக்குமா?

நாடாளுமன்றத் தேர்தலுக்கு அடுத்த நாள் யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்திருக்கும் கப்பிட்டல் டிவியில் நானும் கலாநிதி கணேசலிங்கமும் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டோம். அதன்போது பதின்மூன்றாவது திருத்தத்தை அரசாங்கம் நீக்கினால் அதை இந்தியா தடுக்குமா என்று உரையாடப்பட்டது.

அதற்கு கணேசலிங்கம் ஏற்கனவே இந்தியா வடக்கு கிழக்கு இணைப்பு பிரிக்கப்பட்ட பொழுது அதை எதிர்க்கவில்லை எனவே இனிமேலும் 13ஆவது திருத்தத்தில் கைவைத்தால் இந்தியா எதிர்க்கும் என்று எப்படி எடுத்துக் கொள்வது? என்று கேட்டார். அரசாங்கம் புதிய யாப்பை உருவாக்கும் பொழுது அதில் 13 ஆவது திருத்தத்தை அகற்றக்கூடும் என்ற பேச்சு பலமாக அடிபடுகிறது.

ராஜபக்சக்கள் இந்தியாவுக்கான விசேஷ அந்தஸ்துடைய ஒரு தூதுவராக மிலிந்த மொரகொடவை நியமித்து இருக்கிறார்கள். இவர் தேர்தலுக்கு முன்னரே 13ஆவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்று கூறத் தொடங்கி விட்டார். மேலும், புதிய அமைச்சரவையில் மாகாணசபைகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கும் அட்மிரல் வீரசேகர மகாண சபை முறைமையை ஏற்றுக் கொள்ளாதவர். எனவே இந்த இரண்டு நியமனங்களுக்கு ஊடாகவும் பார்த்தால் ராஜபக்சக்கள் 13 இல் கை வைப்பார்களா என்ற சந்தேகம் எழுகிறது. அவ்வாறு அவர்கள் 13இல் கை வைத்தால் அதை இந்தியா தடுக்குமா கடந்த சுமார் 34 ஆண்டு கால அனுபவத்தின் அடிப்படையில் பார்த்தால் இந்தியா அதை எதிர்க்கும் என்று நம்பத்தக்க நிலைமைகள் குறைவாகவே காணப்படுகின்றன. அந்த அனுபவங்களை இங்கு சுருக்கமாக தொகுத்து பார்க்கலாம்.

பதின்மூன்றாவது திருத்தம் இந்திய-இலங்கை உடன்படிக்கையின் பிரகாரம் உருவாக்கப்பட்டது. இந்திய இலங்கை உடன்படிக்கை எனப்படுவது இனப்பிரச்சினைக்கு தீர்வாக உருவாக்கப்பட்டது என்று கூறப்பட்ட போதிலும் அதில் இனப்பிரச்சினையில் ஒரு முக்கிய தரப்பாகிய தமிழர் தரப்பு கையெழுத்திடவில்லை. அப்படி என்றால் அதை எப்படி இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வு என்று எடுத்துக் கொள்வது? இவ்வாறு தமிழர்களை ஒரு தரப்பாகக் கொள்ளாமல் இந்தியாவும் இலங்கையும் மேற்கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் உருவாக்கப்பட்டதே யாப்பின் 13வது திருத்தம். அது மாகாண சபைகளை உருவாக்குவதற்கான திருத்தம் ஆகும்.

எனினும் இந்திய-இலங்கை உடன்படிக்கை எனப்படுவது பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் மட்டும் அல்ல அதற்கும் அப்பால் அந்த உடன்படிக்கையின் இதயமானது இரண்டு தலைவர்களுக்கும் இடையே பரிமாறப்பட்ட கடிதங்களில் தான் இருக்கிறது என்று கூறுவோரும் உண்டு. அந்த உடன்படிக்கையின் பின்னிணைப்பாக அக் கடிதங்கள் காணப்படுகின்றன. அக்கடிதங்களின் பிரகாரம் இந்தியாவின் நலன்களுக்கு விரோதமாக எந்த ஒரு தரப்பும் இலங்கை தீவை பயன்படுத்த முடியாது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த உடன்படிக்கை எழுதப்பட்ட காலம் கெடுபிடிப் போர் இருந்தது. கெடுபிடிப் போரின் இறுதிக் கட்டத்தில் எழுதப்பட்ட ஓர் உடன்படிக்கை. அது அரசுகளுக்கு இடையிலானது. எனவே அது நிரந்தரமானது என்று கூறுவோரும் உண்டு.

ஆனால் 2009-க்கு பின்னிருந்து இலங்கை தீவு வேகவேகமாக சீனமயப் பட்டு வருகின்றது. இதன் விளைவாக இப்பொழுது இச்சிறிய தீவின் வரைபடம் மாற்றப்பட்டு விட்டது. அதன் பாரம்பரிய அடையாளங்களுக்கு பதிலாக தாமரை மொட்டு கோபுரமே அதன் அடையாளமாக மாறியிருக்கிறது. அதாவது சீன மயமாதல் எனப்படுவது இலங்கைத்தீவின் வரைபடத்தையும் அதன் பாரம்பரிய அடையாளத்தையும் மாற்றி விட்டது. இச்சிறிய தீவின் வரலாற்றில் முன்னெப்போதும் இந்த அளவுக்கு சீனர்களின் பிரசன்னமும் செல்வாக்கும் காணப்பட்டது இல்லை. அப்படி என்றால் இந்திய இலங்கை உடன்படிக்கையின் பிரகாரம் இது எவ்வாறு அனுமதிக்கப்பட்டது?

இங்கு இரண்டு கேள்விகள் எழுகின்றன. ஒன்று இந்திய-இலங்கை உடன்படிக்கை காலாவதியாகி விட்டதா? இரண்டாவது கேள்வி - சீனாவின் பிரசன்னத்தை இந்தியா தனது நலன்களுக்கு சாதகமானதாக பார்க்கவில்லையா? எனவே கூட்டிக் கழித்துப் பார்த்தால் இந்திய-இலங்கை உடன்படிக்கையின் இதயமான பகுதி என்று வர்ணிக்கப்படும் கடிதங்களில் கூறப்பட்ட விடயங்களை மீறி இலங்கைத் தீவு சீனமயப்பட்டு விட்டது. இத்தகைய பொருள்பட கூறின் இந்திய-இலங்கை உடன்படிக்கை காலாவதியாகி விட்டது என்று கூறலாமா? இது முதலாவது.

இரண்டாவது அந்த உடன்படிக்கையின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாண சபை இன்று வரையிலும் அதன் முழுமையான அதிகாரங்களை பெறவில்லை. அதற்குப் பின் தொடர்ச்சியாக வந்த எந்தவொரு அரசாங்கமும் மாகாண சபைகளுக்கு காணி பொலிஸ் அதிகாரங்களை வழங்கவில்லை. முதலாவது வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபையின் முதலமைச்சராக இருந்த வரதராஜபெருமாள் ஒரு முறை சொன்னார் இந்திய மாநில கட்டமைப்பை ஒத்த ஒரு மாகாண கட்டமைப்புதான் 13ஆவது திருத்தத்தில் உள்ளது என்று. ஆனால் நடைமுறை அப்படியல்ல. தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்கள் மாகாணத்திலிருந்து அதிகாரங்களை எடுத்துக்கொண்டன. அதுமட்டுமல்ல உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விஷயங்களையும் கூட அதாவது காணி பொலிஸ் அதிகாரங்களை அவர்கள் மாகாணத்துக்கு வழங்கவே இல்லை.

அதிலும் குறிப்பாக கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின் இந்தியாவுக்கு மேற்கொண்ட முதலாவது விஜயத்தின் முடிவில் இந்தியாவில் வைத்து ஆணித்தரமாகச் சொன்னார் காணி பொலிஸ் அதிகாரங்களை வழங்க போவதில்லை என்று.

இந்தியா அதைக் குறித்து கருத்து எதையும் கூறவில்லை. இவ்வாறு உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களையும் கடந்த 34 ஆண்டுகளாக தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்கள் நிறைவேற்ற தவறியமை குறித்து இந்தியா இலங்கை அரசாங்கங்களின் மீது எப்போதாவது ஏதாவது அழுத்தங்களை பிரயோகித்திருக்கிறதா?

ஏன் பிரயோகிக்கவில்லை? இந்தியாவும் சேர்ந்து மாகாணக் கட்டமைப்பை கைவிட்டு விட்டதா? இத்தகைய பொருள்படக் கேட்டால் இந்திய-இலங்கை உடன்படிக்கை காலாவதியாகி விட்டதா? மூன்றாவது கணேசலிங்கம் சுட்டிக்காட்டியது. வடக்கு கிழக்கு இணைப்பை ஜேவிபி ஒரு வழக்கு தொடுத்து பிரித்த போது அதையும் இந்தியா தடுக்கவில்லை. வடக்கு கிழக்கு இணைக்கப்பட்ட போது அமரர் ராஜீவ் காந்தி தமிழ் தலைவர்களுக்கு ஓர் உத்தரவாதத்தை வழங்கினார். இப்போதைக்கு அது தற்காலிகமாக இணைக்கப்பட்டு பின்னாளில் அவை நிரந்தரமாக இணைக்கப்படும் என்று. ஆனால் இப்பொழுது ராஜீவ் காந்தியும் இல்லை வடக்கு கிழக்கு இணைப்பும் இல்லை. இத்தகைய பொருள்படக் கூறின் இந்திய-இலங்கை உடன்படிக்கை காலாவதியாகி விட்டது என்று எடுத்துக் கொள்ளலாமா?

எனவே மேற் கண்டவற்றை தொகுத்துப் பார்த்தால் இனி வரும் காலங்களிலும் ராஜபக்சவின் அரசாங்கம் 13 ஆவதை நீக்கும் நடவடிக்கைகளை எடுத்தால் அதை இந்தியா தடுக்கும் என்று எப்படி எடுத்துக் கொள்வது? கொழும்பிலிருக்கும் இந்திய தூதரகத்தின் அதிகாரி ஒருவர் இது விடயத்தில் இந்திய தூதுவர் பதின்மூன்றாவது திருத்தம் நீக்கப்படுவதற்கு ஆதரவாக இருக்க மாட்டார் என்ற தொனிப்பட கருத்துத் தெரிவித்துள்ளார். ஆனால் விமல் வீரவன்சவும் வீரசேகரவும் அதற்கு எதிராகப் பதில் கூறி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு பின்னணியில் புதிய யாப்பு என்று ஒன்று உருவாக்கப் படுமாக இருந்தால் அதில் 13 நீக்கப்படலாம் என்ற சந்தேகங்கள் அதிகரித்து வருகின்றன.

இங்கு முக்கியமாக ஒன்றை சுட்டிக்காட்ட வேண்டும் பதின்மூன்றாவது திருத்தம் என்று கருதப்படுவது இனப்பிரச்சினைக்கான தீர்வைத்தான். இந்திய-இலங்கை உடன்படிக்கையின் பிரகாரம் இப்போதுள்ள யாப்பு 13ஆவது தடவையாக திருத்தபட்டது. ஒரு புதிய யாப்பில் திருத்தங்கள் இருக்காது அது இனப்பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கியதாக இருக்கும் என்று பார்த்தால் இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வை அதில் ராஜபக்சக்கள் முன்வைக்க வேண்டி இருக்கும். அதற்க்குரிய நிலைமைகள் உண்டா? ஒரு புதிய யாப்பை உருவாக்குவது என்பது 19ஆவது திருத்தத்தைப் பலவீனமாகி 20 ஆவது திருத்தத்தை கொண்டு வருவதைப் போன்றது அல்ல. ஒரு புதிய யாப்பை மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலம் மட்டும் உருவாக்கிவிட முடியாது. அதை பொதுசன வாக்கெடுப்புக்கு விட வேண்டியிருக்கும். தமிழ்மக்கள் அதற்கு எதிர்ப்பைக் காட்டும் நிலைமைகளும் இருக்கும். எனவே ராஜபக்சக்கள் இது விடயத்தில் ரிஸ்க் எடுப்பார்களா? அல்லது இப்போது இருக்கும் நிலைமையை தொடர்வதன் மூலம் சமாளித்துக் கொண்டு போகப் பார்ப்பார்களா?

20ஆவது திருத்தத்தின் பிரகாரம் அவர்களுக்கு உரிய அதிகாரம் கிடைத்து விடும். வம்ச ஆட்சிக்கு இருந்த தடைகள் நீங்கி விடும். எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து அவர்கள் சிந்திக்க வேண்டிய தேவை இருக்காது. தமிழ் தரப்பிலிருந்து கூர்மையான எதிர்ப்பு எதுவும் காட்டப்படாத வரை அவர்கள் அதைப்பற்றி யோசிக்க தேவையில்லை. அவ்வாறு காட்டக்கூடிய எதிர்ப்புக்களையும் புலிகளை மீள உருவாக்குகிறார்கள் என்று கூறி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கையாளலாம் என்ற நிலைமை உள்ளவரை அவர்கள் இது விடயத்தில் அக்கறை காட்ட மாட்டார்கள்.

பதிலாக இப்போது இருக்கும் கோறை ஆக்கப்பட்ட 13ஐத் தொடரலாம். அதுதான் அவர்களுக்கும் வசதியானது. ஏனெனில் காணி பொலிஸ் அதிகாரம் அற்ற பலவீனமான ஒரு மாகாண கட்டமைப்பை அப்படியே விடும்போது சர்ச்சைகளும் வராது. இந்தியாவோடு பிரச்சினை ஏற்பட வேண்டியும் வராது.

இதற்கு தேவையான கெட்ட முன்னுதாரணத்தை ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே காட்டியிருக்கிறார். அதன்படி நிலைமாறுகால நீதியை தொடர்ந்து முன்னெடுக்கப் போவதாக கூறிக்கொண்டே காலத்தைக் கடத்தலாம். மேலும் கால அவகாசத்தை கேட்கலாம். கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனை யத்தை நிர்மாணிக்கும் பணிகள் மற்றும் மன்னாரில் பியர் துறைமுகத்தை நிர்மாணிக்கும் பணிகள் போன்றவற்றை இந்தியாவுக்கு வழங்குவதன் மூலம் அவர்கள் இந்தியாவை சமாளிக்க எத்தனிப்பார்கள்.

கோவிட்-19க்கு பின்னரான துருவ மயப்படும் உலகச் சூழலானது ராஜபக்சக்களை சீனாவின் செல்வாக்கு வலையத்துக்கு வெளியில் எடுக்க வேண்டிய ஒரு நிலைமையை ஏற்படுத்தினால் இந்தியாவும் உட்பட ஏனைய வெளித் தரப்புக்கள் தமிழ்த் தரப்பை கையாள்வது பற்றி சிந்திக்கக் கூடும். அது வரையிலும் ரணில் விக்ரமசிங்க காட்டிய வழியிலேயே ராஜபக்சக்களும் பயணிப்பார்களா ?

# இந்தியாவிருந்து வருவோர் குறித்து விழிப்பு வேண்டும் என்கிறார் சுகாதார சேவைகள் பணிப்பாளர்



இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக யாழ்ப்பாண குடாநாட்டுக்கு வருவோர் தொடர்பாக மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

“இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று மிகவும் அதிகளவில் காணப்படுகின்றது. எனவே, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் பகுதிகளிற்கு இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக வருபவர்கள் தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

கடற்கரையை அண்டிய பகுதியில் இலங்கை கடற்படையினரால் விசேட ரோந்து, கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. இதனடிப்படையில் அண்மையில் தொண்டமானாறுப் பகுதியில் இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக வந்திறங்கிய 8 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தார்கள்.

ஆனால் இன்னும் எத்தனை பேர் இவ்வாறு சட்டவிரோதமாக வருகை தந்துள்ளார்கள் என்பது தொடர்பில் ஒரு கேள்வி உள்ளது. இது தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். இந்த விடயம் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநராலும் எமக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. கடற்கரையை அண்டிய பகுதிகளில் உள்ள பிரதேச செயலர்கள் தமது பிரதேசமட்டத்தில் கட்டாயமாக கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தயாராக வேண்டும்.

மேலும், மாதத்தில் இரண்டு தடவைகள் கூட்டங்களை வைத்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கு மாகாண ஆளுநர் விடுத்த கோரிக்கைக்கு இணங்க இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக வருவோர் தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரானா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்” என கூறினார்.

# இந்தியாவின் ஜனநாயகத்தை விமர்சனங்கள் தான் வலிமையாக்குகின்ற தென்கிறார் பிரதமர் மோடி

விமர்னங்கள்தான் இந்திய ஜனநாயகத்தை வலிமையாக்குகின்றன, இந்தியாவின் பொருட்கள் மட்டுமல்லாமல், இந்தியாவின் குரல்களும் உலகளவில் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்று பிரதமர் மோடி பேசினார். பத்ரிகா குழுமத்தின் தலைவர் குலாப் கோத்தாரி எழுதிய நூல்களை பிரதமர் மோடி காணொலி வாயிலாக இன்று வெளியிட்டு, பத்திரிகா கேட் பகுதியையும் திறந்து வைத்தார். இந்த நிகழச்சியில் ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட், ஆளுநர் கல்ராஜ் மிஸ்ரா, பத்ரிகா குழுமத்தின் தலைவர் குலாப் கோத்தாரி ஆகியோர் பங்கேற்றனர். அப்போது பிரதமர் மோடி பேசியதாவது:

ஒவ்வொரு சர்வதேச அமைப்பிலும் நாடு வலிமையான தாக்கத்தை ஏற்படுத்தும் போது, இந்திய ஊடகங்களும் உலகளவில் செல்வது அவசியம். நமது நாளேடுகள், பத்திரிகைகள் உலகளவிலான மதிப்பை, கவுரவத்தைப் பெற வேண்டும். இந்த டிஜிட்டல் காலத்தில், உலகம் முழுவதம் டிஜிட்டல் முறையில் நம் ஊடகங்கள் சென்றடைய வேண்டும். உலகின் பல்வேறு பகுதிகளில் வழங்கப்படுவது போல இலக்கிய விருதுகளை இந்திய நிறுவனங்கள் வழங்க வேண்டும். இந்த நேரத்துக்கு அவசியம், தேசத்துக்கு அத்தியாவசியமாகும். இந்திய ஊடகங்கள் நாட்டுமக்களுக்கு எப்போதும் இல்லாத வகையில் கரோனா காலத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி சேவையாற்றி வருகின்றன. அரசின் பணிகளை ஆய்வு செய்து, மதிப்பிட்டு, குறைபாடுகளையும் சுட்டுக்காட்டுகின்றன. சில நேரங்களில் ஊடகங்கள் விமர்சனம் செய்கின்றன. சமூகஊடகங்கள் இருக்கும் இந்த காலத்தில் அதிகமாக இருக்கிறது.

ஆனால், ஒவ்வொருவரும் விமர்சனங்களிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். விமர்சனங்கள்தான் இந்திய ஜனநாயகத்தை வலிமையாக்குகின்றன. ஸ்வத் பாரத் இயக்கம், உஜ்வாலா திட்டம் போன்றவற்றை மத்திய அரசு அறிமுகம் செய்தபோது, அதுகுறித்து மக்களுக்கு கொண்டு சென்று ஊடகங்கள் விழிப்புணர்வு ஊட்டின. தற்சார்பு பொருளாதாரத் திட்டத்தை கொண்டு செல்வதிலும் ஊடகங்களின் பங்கு சிறப்பாக இருந்து வருகிறது. கோத்தாரியின் சம்வாத் உபனிசத், அஸ்கர் யாத்ரா ஆகியவை இந்திய கலாச்சாரத்தையும், பாரம்பரியத்தையும், தத்துவங்களையும் போற்றுபவை. தற்போதுள்ள இளையதலைமுறை இந்த புத்தகங்களை கூகுள் குரு மூலம் தேடிப்படிப்பார்கள் என நம்புகிறேன். சமூக ஊடகங்கள் தாக்கம் அதிகமாக இருக்கும் இந்த காலகட்டத்தில் நமது புதிய தலைமுறை இளைஞர்கள் தீவிரமான அறிவைப் பெறுவதிலிருந்து விலகாமல் இருப்பது மிகவும் கட்டாயமாகும். வீடுகளில் வழிபாட்டுக்கு தனி அறையும் ஒதுக்கியதைப் போல், புத்தகங்களை வைப்பதற்கு தனி இடமும், படிப்பதற்கு தனி அறையும் வேண்டும். குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் நாள்தோறும் சிலமணிநேரங்கள், புத்தகங்களில் சில பக்கங்களை படிப்பதை வழக்கமாகக் கொள்ள வேண்டும். வேதங்கள், உபநி‘தங்கள் ஆன்மீக மற்றும் தத்துவங்களோடு மட்டும் நிறுத்தவில்லை, பிரபஞ்சத்தையும், அறிவியலையும் வழங்குகின்றன. இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்தார்.



# தூக்கிட்ட நிலையில் பரந்தனில் காதல் ஜோடியின் சடலம் மீட்பு!

கிளிநொச்சி - பரந்தன், ஓசியர் சந்திப் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆண், பெண் இருவரின் சடலங்கள் நேற்று 10ம் திகதி காலை மீட்கப்பட்டுள்ளது.

கடந்த 4ம் திகதி முதல் காணாமல் போன நிலையில் தேடப்பட்டு வந்த பரந்தனைச் சேர்ந்த யாழ்ப்பாணம் மின்சார சபையில் பணியாற்றும் சுசிதரன் (28-வயது) இரத்தினபுரத்தைச் சேர்ந்த கிளிநொச்சி பிரதேச செயலகத்தில் பணியாற்றும் தனுீயா (27-வயது) ஆகியோரின் சடலங்களே மீட்கப்பட்டுள்ளது.

குறித்த இருவரும் காதலித்து வந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் குறித்த யுவதிக்கு ஒரு வாரத்திற்கு முன்னதாகவே பிரதேச செயலகத்தில் வேலை கிடைத்தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கொழும்பின் ஐலண்ட் பத்திரிகையின் ஊடகவியலாளர் அவரது வீட்டில் சடலமாக மீட்பு!



ஐலண்ட் பத்திரிகையின் மூத்த ஊடகவியலாளர் Zakki Jabbar அவரது வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கொழும்பின் புறநகர்ப் பகுதியான பெலவத்தையில் வசித்து வந்த அவர் உயிரிழந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில நாட்களாக காணாமல் இருந்த அவர் நேற்று அவரது வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. தனியாக வசிக்கும் Zakki Jabbar பல நாட்களாக வேலைக்கு செல்லவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. அவரின் உறவினரொருவர் மூடப்பட்டிருந்த அவரது இல்லத்தை திறந்து பார்த்த போதே ணுயமமை துயடிடியச உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தமைக்கான காரணம் என்ன என்பது குறித்து இதுவரை தெரியவரவில்லை. எனினும், அவர் உயிரிழந்து பல நாட்களாகியிருக்கலாம் என்ற சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது இந்நிலையில், குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

TRADITIONAL CHINESE
ACUPUNTRE THERAPY CENTRE

| | |
|---|---|
| எல்லாவிதமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி, | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி, | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine
Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் பணிகளை அதிமுக தொடங்கிவிட்டது: அமைச்சர் கடம்பூர் ராஜு பேட்டி



தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் பணியை அதிமுக தொடங்கிவிட்டது என அமைச்சர் கடம்பூர் ராஜூ தெரிவித்தார்.கோவில்பட்டியில் நடந்த நிகழ்ச்சியில் அமைச்சர் கடம்பூர் செ.ராஜூ முன்னிலையில் தீத்தாம்பட்டி ஊராட்சி தலைவர் பெரியசாமி அதிமுகவில் இணைந்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணை தலைவர் கணேஷ் பாண்டியன், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் மோகன், நகர அதிமுக செயலாளர் விஜயபாண்டியன், ஒன்றிய செயலாளர்கள் அய்யாத்துரைப்பாண்டியன், அன்புராஜ், கருப்பசாமி, ஒன்றியக்குழு தலைவர் கஸ்தூரி சுப்புராஜ், துணை தலைவர் பழனிச்சாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.பின்னர் அமைச்சர் செய்தியாளர்களிடம் கூறும்போது, கன்னியாகுமரி மக்களவைத் தொகுதி இடைத்தேர்தலில் அதிமுக போட்டியிடுவது மற்றும் வேட்பாளர் குறித்து தமிழக முதல்வரும், துணை முதல்வரும் அறிவிப்பார்கள்.

இளைஞர், இளம்பெண்கள் பாசறை உறுப்பினர் சேர்க்கை நடந்து வருகிறது. வரும் 17ம் தேதி இளைஞர் இளம்பெண்கள் பாசறை செயலாளர் பரமசிவம் எம்.எல்.ஏ. வருகிறார். அதேபோல் 12ம் தேதி ஜெ. பேரவை உறுப்பினர் சேர்க்கை முகாமுக்கு வருவாய் துறை அமைச்சரும், ஜெ. பேரவை செயலாளருமான ஆர்.பி. உதயகுமார் வருகை தர உள்ளார்.களத்தில் சட்டப்பேரவை தேர்தல் பணியை தொடங்கிய முதல் கட்சியாக அதிமுக உள்ளது. அதேபோல் முதல் வெற்றியும் அதிமுகதான் பெறும், என்றார் அவர்.

# அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை அதிகரிப்பு; அமைச்சர் செங்கோட்டையன் தகவல்




அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை அதிகரித்துள்ளதாகவும், அதற்கேற்ற வகையில் வகுப்பறைகள், ஆசிரியர்கள் இருப்பதாகவும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார். அரசுப் பள்ளிகளில் 20202021 ஆம் கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை கடந்த ஆக.17ம் தேதி தொடங்கியது. 11ம் வகுப்பு மாணவர்களுக்கும் வேறு பள்ளிகளில் இருந்து மாறுதல் பெறும் மாணவர்களுக்கும் ஆகஸ்ட் 24ம் தேதி மாணவர் சேர்க்கை தொடங்கியது.

இதற்கிடையே ஆகஸ்ட் இறுதியிலேயே மாணவர் சேர்க்கை 10 லட்சத்தைத் தாண்டியது. தற்போது 12 லட்சத்தைத் தாண்டி மாணவர்கள் சேர்க்கை உயர்ந்து வருகிறது. விரைவில் இந்த எண்ணிக்கை 15 லட்சத்தை எட்டக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை அதிகரித்துள்ளதாகவும் அதற்கேற்ற வகையில் வகுப்பறைகள், ஆசிரியர்கள் இருப்பதாகவும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டி பாளையம் அருகே தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில் கன்று வளர்ப்பு, பயிர்க் கடன், தனிநபர் கடன் என சுமார் ரூ.4 கோடி மதிப்பீட்டில் திட்டப்பணிகள் இன்று நடைபெற்றன. இதில் பங்கேற்ற பிறகு அமைச்சர் செங்கோட்டையன் செய்தியாளர்களிடம் பேசினார்.

அப்போது அவர் கூறும்போது, ''இப்போது இருக்கும் ஆசிரியர்களை வைத்துக்கொண்டே கற்றல் பணிகளை நிறைவேற்ற முடியும். வகுப்பறைகளைப் பொறுத்தவரையில் போதுமான அளவு இருக்கின்றன. ஒருசில இடங்களில் சேர்க்கை அதிகரித்து கூடுதல் மாணவர்கள் சேர்ந்தால், முதல்வரின் ஒப்புதலைப் பெற்று அவர்களுக்கான கட்டிட வசதிகள் கட்டப்படும்'' என்றார் அமைச்சர் செங்கோட்டையன்.

# இந்தியாவில் இதுவரை இல்லாத வகையில் ஒரே நாளில் 75 ஆயிரம் பேர் கொரோனாவில் இருந்து மீண்டனர்



கொரோனாவில் மீண்டவர்களில் முதல் இடத்தில் பிரேசில் இருக்கிறது. அங்கு 35.72 லட்சம் பேர் கொரோனாவில் இருந்து மீண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் நமது நாட்டில் நேற்று காலை 8 மணியுடன் முடிந்த ஒரே நாளில், இதுவரை இல்லாத வகையில் 74 ஆயிரத்து 894 பேர் கொரோனாவில் இருந்து மீண்டு, ஆஸ்பத்திரிகளில் இருந்து வீடு திரும்பி உள்ளனர். இதன் மூலம் இந்தியாவில் கொரோனாவில் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 33 லட்சத்து 98 ஆயிரத்து 844 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவின் மீட்பு விகிதம் 77.77 சதவீதமாக உயர்ந்துள்ளது. நேற்று ஒரே நாளில் புதிதாக 89 ஆயிரத்து 706 பேருக்கு தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) 11 லட்சத்து 54 ஆயிரத்து 549 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டுள்ள நிலையில்தான் இந்தளவுக்கு புதிதாக பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தகுந்த அம்சம். இதுவரை நாட்டில் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை 5 கோடியே 18 லட்சத்து 4 ஆயிரத்து 677 ஆக அதிகரித்துள்ளது.

இந்தியாவில் கொரோனா பாதிப்புக்கு ஆளானவர்களின் மொத்த எண்ணிக்கை, 43 லட்சத்து 70 ஆயிரத்து 128 ஆக உள்ளது. இதில் அமெரிக்காவுக்கு (65.16 லட்சம்) அடுத்த இடத்தில் இந்தியா உள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் இந்தியாவில் 1,115 பேர் கொரோனாவுக்கு இரையாகி உள்ளனர். இதன் மூலம் மொத்த பலி எண்ணிக்கை 73 ஆயிரத்து 890 ஆக அதிகரித்துள்ளது. பலி விகிதம், 1.69 சதவீதமாக குறைந்துள்ளது.

இதுவரை 73 ஆயிரத்து 890 பேர் பலியாகி உள்ள நிலையில், அதிகபட்ச பலியை சந்தித்து மராட்டியம் தொடர்ந்து முதல் இடத்தில் (27 ஆயிரத்து 407) உள்ளது. இரண்டாம் இடத்தில் தமிழகம் உள்ளது. 3வது இடம் வகிக்கிற கர்நாடகத்தில் 6,680 பேர் பலியாகி உள்ளனர். 1,000க்கும் அதிகமானோரை டெல்லி (4,618), ஆந்திரா (4,560), உத்தரபிரதேசம் (4,047), மேற்கு வங்காளம் (3,677), குஜராத் (3,133), பஞ்சாப் (1,990), மத்திய பிரதேசம் (1,609), ராஜஸ்தான் (1,164) ஆகியவை இழந்துள்ளன.

நாட்டில் தற்போது பல்வேறு ஆஸ்பத்திரிகளில் கொரோனாவுக்கு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை 8 லட்சத்து 97 ஆயிரத்து 394 ஆகும். இது மொத்த பாதிப்பில் ஐந்தில் ஒரு பங்குதான் (20.53 சதவீதம்) என்பது குறிப்பிடத்தக்கது. இந்த புள்ளி விவரங்களை மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

# பிறந்து 4 நாட்களே ஆன பச்சிளம் குழந்தை எரித்துக் கொலை: தாய்பாட்டி கைது

சங்கரன்கோவிலில் பிறந்து 4 நாட்களே ஆன பச்சிளம் குழந்தையை தீ வைத்து எரித்துக் கொலை செய்த கொடூர தாய், பாட்டியை போலீசார் கைது செய்தனர். தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ரெயில்வே பீடர் ரோடு பகுதியில் தனியாருக்கு சொந்தமான தியேட்டர் உள்ளது. அதன் வளாகத்தில் காலி இடத்தில் நேற்று அதிகாலையில் திடீரென்று தீப்பிடித்து எரிந்தது. உடனே அந்த வழியாக நடைப்பயிற்சி செய்தவர்கள் சென்று பார்த்த போது பிறந்து சில நாட்களே ஆன பச்சிளம் ஆண் குழந்தையின் உடல் தீயில் கருகிய நிலையில் கிடந்தது.

இதை அறிந்த சங்கரன்கோவில் டவுன் போலீசார் விரைந்து சென்று பார்த்த போது, கருகிய நிலையில் குழந்தை உடலும், பாதி எரிந்த நிலையில் துணிப்பையும் கிடந்தன. குழந்தை எரித்துக் கொல்லப்பட்ட இடத்துக்கு போலீஸ் மோப்ப நாய் டைகர் வரவழைக்கப்பட்டது. அது, சம்பவ இடத்தில் மோப்பம் பிடித்து விட்டு, சங்குபுரம் 6வது தெருவில் இருக்கும் சண்முகவேலின் வீட்டின் முன்பு ஓடி நின்றது. இதையடுத்து சண்முகவேலின் குடும்பத்தினரிடம் போலீசார் தீவிர விசாரணை நடத்தினர். இதில் பல்வேறு திடுக்கிடும் தகவல்கள் வெளியானது. இதுபற்றி போலீஸ் தரப்பில் கூறப்பட்டதாவது:

சங்கரன்கோவில் திருப்பூர் குமரன் நகரை சேர்ந்தவர் சண்முகவேல். சமையல் தொழிலாளி. இவருடைய மனைவி இந்திராணி. இவர்களுடைய மகள் சங்கரகோமதி (வயது 22). இவருக்கும், மற்றொரு பிரிவை சேர்ந்த வாலிபர் ஒருவருக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டு காதலாக மாறியது. அவர்கள் 2 பேரும் தனிமையில் சந்தித்து உல்லாசமாக இருந்ததாக கூறப்படுகிறது. இதில் சங்கரகோமதி கர்ப்பமானார்.

திருமணத்துக்கு முன்னரே சங்கரகோமதி கர்ப்பமானதால், அவமானம் அடைந்த சண்முகவேலின் குடும்பத்தினர், கடந்த சில மாதங்களுக்கு முன்பு தங்களது வீட்டை காலி செய்து விட்டு, சங்கரன்கோவில் சங்குபுரம் பகுதியில் வாடகை வீட்டில் குடியேறினர்.

இந்த நிலையில் கடந்த 4 நாட்களுக்கு முன்பு சங்கரகோமதிக்கு வீட்டிலேயே அழகான ஆண் குழந்தை பிறந்தது. திருமணத்துக்கு முன்னரே குழந்தை பிறந்ததால் அவமானமாக கருதிய குடும்பத்தினர், பச்சிளம் குழந்தையையும் கொலை செய்ய திட்டமிட்டனர். அதன்படி நேற்று அதிகாலையில் சங்கரகோமதி, அவருடைய தாய் இந்திராணி ஆகிய 2 பேரும் சேர்ந்து குழந்தையை தூக்கிக் கொண்டு, அங்குள்ள தனியார் தியேட்டர் வளாகத்துக்கு கொண்டு சென்றனர். அங்கு துணிகளுடன் சேர்த்து குழந்தையையும் தரையில் கிடத்தி, அதன் மீது மண்ணெண்ணெயை ஊற்றி தீ வைத்ததாக கூறப்படுகிறது. இதில் குழந்தை தீயில் எரிந்து உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தது. மேற்கண்ட தகவல்கள் போலீசாரின் விசாரணையில் தெரிய வந்தது. குழந்தையை கொடூரமாக எரித்துக் கொலை செய்த தாய் சங்கரகோமதி, இந்திராணி ஆகிய 2 பேரையும் போலீசார் கைது செய்தனர். இது தொடர்பாக சங்கரகோமதியின் காதலனையும் பிடித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பா.ஜ.க. வெற்றியை தடுக்க இந்தி எதிர்ப்பை தி.மு.க. கையில் எடுத்துள்ளது பா.ஜ.க. மாநில துணைத்தலைவர் பேட்டி

வருகிற சட்டசபை தேர்தலில் பா.ஜ.க. வெற்றியை தடுக்க இந்தி எதிர்ப்பை தி.மு.க. கையில் எடுத்துள்ளது என்று பா.ஜ.க. மாநில துணைத்தலைவர் கருப்பு முருகானந்தம் கூறியுள்ளார்.

அறந்தாங்கி அருகே நடைபெற்ற திருமண விழாவில் பங்கேற்ற பா.ஜ.க. மாநில துணைத்தலைவர் கருப்பு முருகானந்தம் நிருபர்களிடம் கூறியதாவது: கடந்த பாராளுமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதாவை குறைகூறி தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றது. ஆனால் வரும் சட்டப்பேரவை தேர்தலில் அந்த நிலை இருக்காது. பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெறும். அந்த வெற்றியை தடுப்பதற்காக தி.மு.க. 1965 ஆம் ஆண்டு பார்முலாவான இந்தி எதிர்ப்பை கையில் எடுத்துள்ளது. பா.ஜ.க. தமிழகத்தில் இந்தி மொழியை திணிக்க வேண்டும் என்று எப்போதும் நினைக்கவில்லை. மும்மொழிக் கொள்கையால் தமிழர் பண்பாடு, தமிழர் கலாச்சாரம் வளரும். இந்தி மொழியை கற்பதால் வடநாட்டில் வாழும் தமிழர்கள் நமது தாய் மொழியை கற்பதற்கு உதவியாக இருக்கும்.இந்தி வேண்டாம் போடா என்று டிசர்ட்டில் எழுதி அணிந்துள்ளவர்கள் இந்தியில் பேசுவதை சமூக ஊடகங்களில் பார்த்திருப்பீர்கள்.

நாங்கள் (பா.ஜ.க.வினர்) இந்தி வேண்டாம் என்று தான் சொல்லுகிறோம். எங்களுக்கு இந்தி தெரியாது. விருப்பப்பட்டால் படியுங்கள் என்று தான் கூறுகிறோம்.இவ்வாறு அவர் கூறினார்.பேட்டியின்போது மாநில மகளிரணி செயலாளர் கவிதா ஸ்ரீகாந்த், மாவட்ட இளைஞரணி தலைவர் சக்தி குமரன், மாவட்ட செயற் குழு உறுப்பினர் ஜெயபாண்டியன் உள்ளிட்ட பலர் இருந்தனர்.

# அமெரிக்க விண்கலத்துக்கு இந்திய அமெரிக்க வீராங்கனை கல்பனா சாவ்லா பெயர் சூட்டி மரியாதை



விண்வெளியில் உள்ள சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு பொருட்களைக் கொண்டு செல்லும் வர்த்தகரீதியான கார்கோ விண்கலத்துக்கு மறைந்த இந்திய அமெரிக்க விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்தியாவில் பிறந்து படித்து வளர்ந்து விண்வெளிக்குள் சென்ற முதல் பெண் கல்பனா சாவ்லா என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவைச் சேர்ந்த விண்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில் நுட்பங்களை உருவாக்கும் நார்த்ராப் க்ரும்மான் நிறுவ-னம் தன்னுடைய அடுத்த விண்கலத்துக்கு எஸ்எஸ் கல்பனா சாவ்லா என்று பெயர்சூட்டியுள்ளதாக அறிவித்துள்ளது.

கடந்த 2003-ம் ஆண்டு பிப்ரவரி 1-ம் தேதி கொலம்பியாவில் கல்பனா சாவ்லா உள்பட 7 விண்வெளி வீரர்கள் பயணித்த விண்கலம் வானில் வெடித்துச் சிதறியதன் நினைவாக இந்த பெயர் சூட்டப்பட்டுள்ளது. இதுகுறித்து அமெரிக்காவின் நார்த்ராப் க்ரும்மான் நி-றுவனம் ட்விட்டரில் பதிவிட்ட கருத்தில் "நாசாவுக்குச் சென்ற இந்தியாவின் முதல் பெண் விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லாவுக்கு இன்று நாங்கள் மரியாதை செலுத்த இருக்கிறோம். மனிதர்களை சுமந்து செல்லும் விண்கலத்துக்கு கல்பனா சாவ்லா அளித்த பங்களிப்பு நீண்டகாலத்துக்கு நிலைத்திருக்கும். எங்களின் அடுத்த என்ஜி-14 சைக்னஸ் விண்கலத்துக்கு கல்பனா சாவ்லாவின் பெயரை சூட்டுவதில் நார்த்ராப் க்ரும்மேன் நிறுவ-னம் பெருமைகொள்கிறது. மனிதர்களை சுமந்து செல்லும் விண்கலத்துக்கு முக்கியமான பங்களிப்புகளைச் செய்தவர்களுக்கு மரியாதை அளிப்பது எங்கள் நிறுவனத்தின் பாரம்பரிய வழக்கம்.

இந்தியாவில் பிறந்து வளர்ந்து முதன் முதலாக விண்வெளிக்குச் சென்ற கல்பனா சாவ்லா வரலாற்றில் இடம் பிடித்தவர் என்பதால் அவரின் பெயர் தேர்ந்தெடுக்கப்பட்டது. விண்வெளித் திட்டங்களுக்கு கல்பனா சாவ்லா ஏராளமான தியாகங்களைச் செய்து, தனது உயிரையும் இழந்துள்ளார். அவரின் மரபு, வழிகாட்டல் அடுத்துவரும் விண்வெளி வீரர்களுக்கும் இருக்க வேண்டும், அவரின் காலடிகளை பின்பற்றி நடக்க வேண்டும்." எனத் தெரிவித்துள்ளது. நார்த்ராப் க்ரும்மேன் அன்டாரஸ் என்ஜி-14 மிஷனின் கல்பனா சாவ்லா ராக்கெட் விர்ஜினியாவில் உள்ள நாசாவின் மிட் அட்லாண்டின் ரீஜனல் ஸ்பேஸ்போர்ட் தளத்திலிருந்து வரும் 29-ம் தேதி விண்ணில் செலுத்தப்படுகிறது. இந்த விண்கலத்தில் ஏறக்குறைய 3,629 கிலோ கொண்ட பொருட்களை விண்வெளியில் உள்ள நாசா விண்வெளிநிலையத்துக்கு எடுத்துச் செல்கிறது.

ஹரியானா மாநிலத்தில் கர்னல் என்ற ஊரில் ஜூலை 1, 1961ம் ஆண்டு கல்பனா சாவ்லா பிறந்தார். தனது ஆரம்ப கல்வியை கர்னலில் உள்ள அரசு பள்ளியில் படித்த கல்பனா சாவ்லா, 1982 ஆம் ஆண்டு சண்டிகரில் உள்ள பஞ்சாப் பொறியியல் கல்லூரியில் ஏரோநாட்டிகல் துறையில் கல்விப் பயின்று இளங்கலைப் பட்டமும் பெற்றார். பின்னர், 1984ம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் விண்வெளிப் பொறியியல் து-றையில் முதுகலைப் பட்டம் பெற்றார். 1986ல் பல்தேரில் கொலராடோ பல்கலைக்கழகத்தில் 2-வது முதுகலைப் பட்டமும், 1988ல் விண்வெளி பொறியியல் துறையில் முனைவர் பட்டத்தையும் கல்பனா பெற்றார். முதல் விண்வெளிப்பயணத்தை முடித்த கல்பனா சாவ்லா, 2-வது பயணத்துக்கு தயாரானார். பின்னர், 2003-ம் ஆண்டு ஜனவரி 16-ந் தேதி விண்வெளி ஆராய்ச்சிக்காக, அமெரிக்காவின் கென்னடி நிலையத்திலிருந்து கொலம்பியா விண்கலம் எஸ்.டி.எஸ்-107 (STS-107) அனுப்பி வைக்கப்பட்டது.

## உலகத் தமிழர்களை இணைப்பதற்காக கனடா உதயன் பத்திரிகையோடு இணைந்துள்ள மூன்று உலகளாவிய இணையத்தளங்கள்

உலகத் தமிழர்களை இணைப்பதற்காக கனடாவில் கடந்த 25 வருடங்களாக வெளிவரும் உதயன் பத்திரிகையோடு இணைந்துள்ள மூன்று உலகளாவிய இணையத்தளங்கள் கூட்டாக விடுக்கும் அறிவித்தல் இங்கு காணப்படுகின்றது.

மேற்படி இணையத்தளத்தின் விலாசங்கள்: http://www.uthyaannews.ca http://www.nanban.ca http://www.voiceofilankai.lk




# கல்முனை ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்களைப் பாராட்டிய உயிர் பிழைத்த மாலுமி



கப்பலில் தீப்பற்றியபோது நிகழ்ந்த சம்பவங்கள் தொடர்பாக MT New Diamond கப்பலில் இருந்து மீட்கப்பட்ட 57 வயது மதிக்கத்தக்க பனாமாக்கப்பல் மாலுமியும் பிலிப்பைன்ஸ் பொறியியலாளருமான எல்மோர் பல விடயங்களை தெரிவித்துள்ளார்.

கடற்படையினரால் கடந்த வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டு, கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு 3 மணி நேரம் நிபுணர் டாக்டர் எஸ்.சிறிநீதன் தலைமையிலான குழுவினரால் சத்திர சிகிச்சை, அளிக்கப்பட்டு பின்னர் அதிதீவீர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் கடந்த புதன்கிழமை இரவு கொழும்பு லங்கா வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து குறித்த சம்பவம் தொடர்பாக எல்மோர் தெரிவித்துள்ளதாவது, "எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. செப்.3 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணியளவில் வழமைபோல எழுந்தவுடன் உணவைப் பெறுவதற்காக கப்பலிலுள்ள சமையலறைக்குச் சென்றேன்.

அங்கு நண்பர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தேன். சுமார் 15 நிமிட நேரத்தின் பின்னர் காலைக்கடன் கழிப்பதற்காக குளியலறைக்குச் சென்று கடன்களை முடித்துவிட்டு குளித்தேன்.

குளித்துவிட்டு வெளியேறியபோது கப்பலில் பாரிய வெடிச்சத்தம் கேட்டது. அவ்வளவுதான் வேறேதும் நினைவில்லை. யாரோ என்னைத் தாக்குவது போன்று உணர்ந்தேன்.

கப்பலில் ஒருபகுதி எரிவதைக் கண்டேன். பின்பு எதுவும் நினைவில்லை. இருந்தும் இன்னும் நான் உயிர் வாழ்கிறேன். உண்மையில் இலங்கை மக்கள், இலங்கை கடற்படை, விமானப்படையினர் எல்லாம் பாராட்டுக்குரியவர்கள்.

குறிப்பாக கல்முனை ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிகள் ஏனை-யோர் என்னைப் பராமரித்த விதம் மிகவும் கவர்ந்தது. வீட்டில் கூட அத்தகைய கவனிப்பு கிடையாது" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 13 ஐ ஒழிக்க பகல் கனவு காணாதீர்கள் என பாராளுமன்றத்தில் உரையாற்றிய வினோ



இந்தியாவை மீறி 13ஆவது திருத்தத்தை ஒழிக்க முடியாது. 13ஆவது திருத்தச் சட்டத்தை ஒழித்துவிடலாமென எவரும் பகற்கனவு காணக்கூடாது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.


பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

20 ஆவது திருத்தம் என்பது ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்கும் செயல். பாராளுமன்ற உறுப்பினர்கள், மக்களின் கருத்துக்களை செவிமடுக்காது இது திணிக்கப்படுகின்றது. தங்களிடம் 2∴3 பெரும்பான்மை இருக்கின்றதென்பதற்காக 20 ஆவது திருத்தத்தைக் கொண்டு வருவதனை ஏற்க முடியாது.

13 ஆவது திருத்தத்தைப் பொறுத்தவரை அதிலுள்ள மாகாணசபை முறையை தமிழ் மக்கள் ஓரளவுக்கேனும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்நிலையில் இதனை ஒழிக்க வேண்டுமெனக் கூறப்படுவதனையிட்டு கவலையடைகின்றோம்.

தமிழ் மக்களுக்கு எந்தவித தீர்வினையும் வழங்கக் கூடாதென்ற நோக்கத்திலேயே 13 ஆவது திருத்தத்தை ஒழிக்க முற்படுகின்றனர். தமிழ் அரசியல் தலைவர்களின் பல வருட அரசியல் மற்றும் இளைஞர்களின் ஆயுதப் போராட்டங்களுக்கு கிடைத்த ஒரு சிறு தீர்வாகவே இந்த 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் உள்ளது.

இதனை ஒழிக்க வேண்டுமென சிங்களப் பேரினவாதிகள் என்னதான் எதிர்ப்புக்குரல் கொடுத்தாலும் இந்தியாவை மீறி 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை ஒழிக்க முடியாது.எனவே 13ஐ ஒழித்து விடுவோமென எவரும் பகற்கனவு காணக்கூடாது என்றார்.

Carefirst Family Health Team
Accepting New Patients
புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்
+ தமிழ் பேசும் வைத்தியர்கள்
+ ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
+ குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
+ அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
+ அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
+ நீரிழிவு கல்வி திட்டம்
Ontario
Clinic Location:
Carefirst One-Stop Multi Services Centre
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com


# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**

- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**

- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**



# SKN FINANCIAL

www.sknfinancial.com




**கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்**

- $ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- $ புதிய மனைஸ்ன வாங்குவதில் பணச்சிக்கலா?
- $ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- $ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
- $ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்

முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது

உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..
குறைந்த வட்டி!..[2% முதல்]
நிறைந்த பெறுமதி!...
www.sknfinancial.com

**SCARBOROUGH**
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238

**BRAMPTON**
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800

# பாடசாலைக்கு மீளவும் திரும்புதல்

## ரொரன்ரோ மாவட்ட கல்விச் சபை விடுக்கும் முக்கிய அறிவித்தல்

ரொரன்ரோ மாவட்ட கல்விச் சபையானது, எதிர்வரும் செப்டம்பர் 15ம் திகதி மீண்டும் பாடசாலைக்கு திரும்பவுள்ள மாணவர்களையும் ஆசிரியர்களையும் பாதுகாப்பான முறையில் வரவேற்க ஆயத்தமாக உள்ளது

உங்கள் பாடசாலைகள் ஆரம்பமாகும் நாள், தினசரி கல்விச் செயற்பாடுகள், மற்றும் எமது கல்விச் சபை பாடசாலைகளில் மற்றும் கட்டடங்கள் மற்றும் பாடசாலை பஸ்கள் ஆகியவற்றில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தேவையான முகக் கவசங்கள் மற்றும் ஏனைய தேவைகளுக்கும் TDSB.on.ca என்னும் இணையத்தளத்தைப் பார்க்கவும்.

*நீங்கள் பாடசாலைக்கு சமூகமளிக்கின்றீர்களோ அல்லது இணைய வழி மூலமாக பயிலப் போகின்றீர்களோ, நீங்கள் பாதுகாப்பாக திரும்புவதற்கு நாங்கள் இணைந்து பணியாற்றுகின்றோம்.*

Toronto District School Board


# கனடாவில் 'நண்பன் விருதுகள்' வழங்கும் விழா

## 'NANBAN' awards ceremony in Canada




சென்னையில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் 'நண்பன்' இணையத்தளத்தின் ஏற்பாட்டில் கனடாவில் ஒரு எளிமையான

# விருது விழா

**The Estate Banquet & Event Centre.**
430, Nugget Avenue, Scarborough.Ont M1S 4A4.

September 20 2020 Sat @ 6.30 p.m

**Chief Guest: Hon. Raymond Cho** ( Ontario's Minister of Seniors and Accessibility )

Desjardins Financial Security
Solution to Insurance and Financial Needs
Yo K Gamar
B.BA / Business Management
Dir. 416-917-7263
•Life Insurance •Disability Insurance •Mortgage Insurance •Super Visa •Estate planning •Group Plans •R.R.S.P •Long Term Care •Segregated Funds
www.yokgamar.com

Majestic City shopping center Open to the public
Majestic City
Crish Sivakolunthu
647 218 3698
416 291 3555
2900 Markham Rd, Scarborough, ON M1X 1E6

TIMES IRON WORKS INC.
CONTACT
Times Iron Works Inc.
38 Gormley Industrial Ave.
Stouffville, ON L0H 1G0
Tel:- 905 831 5111
Fax:- 905 831 5181

Shankar & Co
Sri Lankan, Indian and Canadian Grocery
416-759-5100
2425 Eglinton Ave E
Scarborough, ON M1K 5G8

JRB universal inc.
• Home Mortgage • 2nd Mortgage • Re-Financing • Commercial Mortgage • Business Loan • Line of Credit
All Approved
R.R.Rajkumar
647-289-6164

Thinking of Buying, Selling or Investing?
Contact Me
Vijay Muthumani
Sales representive
647 963 0705
Homelife Today Reality Ltd Brokerage
210-30 Progress Ave, Toronto, ON M1P 4S6
Off: 416 298 3200
Fax 416 298 3440
Full MLS Services | Open house every week | Mortgage Service | New Development Projects | Leasing Homes and Rental | Commercial Properties | Property Management

INCOME TAX! INCOME TAX!! INCOME TAX!!!
PERSONAL CORPORATION NEW HOME HST FILLING
SELVA VETTYVEL
416 568 4301
905 471 4050
204-7 EASTVALE DRIVE
MARKHAM ON, L3S 4N8

Designs solution for any Media
Grapghic Designing - Printing - and More
Designs 2 Prints
S.Prabagar
647 858 2290
416 292 4999
www.designs2prints.com
info@designs2prints.com
2900 Markham Road, #G1
Scarborough, ON
M1X 1E6.

SEYON FINANCIAL SERVICE
416-438-3350 / 647-268-2300
We are the Specialist in:
➡ Personal Income Tax
➡ Corporation Tax
➡ GST / HST - Houseing Rebate
➡ CONDO / HOUSE Flipping issues
US TAX
Negotiation with CRA
Appeals with CRA
Settlement with CRA

கோவிட்-19 நோயின் தாக்கம் வலுவாக பரவத் தொடங்கிய காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பெற்ற எமது நண்பன் இணையத்தளம் தற்போது உலகெங்கும் அறியப்பட்ட ஒன்றாக விளங்குகின்றது. தொடர்ந்து வரும் ஆண்டுகளில் யாழ்ப்பாணம், சென்னை, கோலாலம்பூர் போன்ற நகரங்களில் "நண்பன் விருதுகள்" வழங்கும் விழாக்கள் நடைபெறவுள்ளன.

நண்பன் WORLDWIDE

குறிப்பு:- அழைக்கப்பட்ட நண்பர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம்: விருந்துபசாரமும் உண்டும்.
மேலதிக விபரங்களுக்கு:- மரியாராசா:- 416 669 6437

NANBAN WORLDWIDE


Amma
Brand
இப்பொழுது கனடாவிலும்
கிடைக்கின்றது!


Amma
Apple Cider
with Mother Vinegar
LOOSE
WEIGHT
HELPS IN :
WEIGHT MANAGEMENT
GLOWING SKIN
GOOD FOR HEART
BLOOD PRESSURE
URIC ACID
100% Natural
NOW IN CANADA
Amma
Apple Cider
with Mother Vinegar
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471


Premium Quality
Amma
Gingelly Oil
(Contains Permitted Anti-Oxidants)
சுத்தமான நல்லெண்ணெய்
NOW IN CANADA
Import and Deliver
AMMA FOOD INC. 647-832-5471
நல்லெண்ணெய்
750ml
375ml


Amma
Herbal
Juices
NOW
IN
CANADA
Jamun with Karela Juice
Aloe Vera Juice
Karela Juice
Amla Juice
Super Energizer
Neem Leaf with Aloe Vera Juice
Body Pain Relax Juice
with Aloe Vera
Aloe Noni with Aloevera Juice
100% HERBAL
100% NATURAL
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471

# மரண அறிவித்தல்

மலர்வு:

16 - 11 - 1948



உதிர்வு:

10 - 09 - 2020

## Dr. ஞானேஸ்வரன் ஐயாத்துரை

(வவுனியா)

**வவுனியாவைப் பிறப்பிடமாகவும், கனடாவை (Whitby) வதிவிடமாகவும் கொண்ட வைத்தியகலாநிதி Dr. ஞானேஸ்வரன் ஐயாத்துரை (மனோதத்துவ நிபுணர்) அவர்கள் 10-09-2020 அன்று சிவபதமடைந்தார்.**

அன்னார் காலஞ்சென்ற பிரபல வழக்கறிஞர் குமாரவேலு ஐயாத்துரை, முத்தம்மா (முத்து) அவர்களின் அன்பு மகனும்,
பத்மினி அருணாசலம் (மிருகவைத்தியர்) அவர்களின் அன்பு கணவரும்,
Dr. நீரஜா, Dr. செந்தூரன் அவர்களின் அன்புத் தந்தையும்,
காலஞ்சென்ற வழக்கறிஞர் கேதீஸ்வரன் (நகர பிதா - வவுனியா), காலஞ்சென்ற யோகேஸ்வரன், மற்றும் ராஜேஸ்வரன் (U.S.A), ஜானகி மனோகரன் (அவுஸ்திரேலியா), ஜெகதீஸ்வரன் (அவஸ்திரேலியா), ராமேஸ்வரன் (அவுஸ்திரேலியா), சாரதா சிவகுமார் (அவுஸ்திரேலியா). Dr. றஞ்சினி கிருஷ்னானந்தன் (அவுஸ்திரேலியா), விக்னேஸ்வரன் (கனடா). விமலேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும்,
Dr. கருணானந்தம் கோகுலம் (இலங்கை), நாகேந்திரராசா (இலண்டன்) அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Highland Funeral Home (3280 Sheppard Ave.East) இல் *15-09-2020* செவ்வாய்கிழமை மாலை *2:00* மணி முதல் *8:00* மணி வரையும், மறுநாள் *16-09-2020* புதன்கிழமை காலை *9:00* மணி முதல் *10:00* மணி வரை பார்வைக்கு வைக்கப்பட்டு பின் *10:00* மணி முதல் *12:30* வரை ஈமைக்கிரியைகள் நடைபெற்று Highland Hills Memorial Gardens (12492 Woodbine Ave.) இல் தகனம் செய்யப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.**

**தொடர்புகட்கு:**

**செந்தூரன் (மகன்): (905) 424-9859**
**வரன் (பெறாமகன்): (905) 999-7193**
**விக்கி (சகோதரன்): (647) 821-6475**
**விமல் (சகோதரன்): (647) 302-2875**

# இவ்வார ராசிபலன்

**11-09-2020 வெள்ளி தொடக்கம் 17-09-2020 வியாழன் வரையும்**




**மேஷம்:** கட்டம்கட்டிப் பார்த்தவங்க முன்னாடி பட்டப்பதவி கிடைக்கக்கூடிய வாரம். சோதனைகள் நீங்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உடல் நலம் திருப்தி தரும். மன அமைதி குறையும். திருமண வாய்ப்பு கூடும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். பொறியியல் துறை லாபம் தரும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. பேச்சு திறமை அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. வீண் செலவுகள் அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அக்னிலிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 5,7,9,0
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,U




**ரிஷபம்:** விற்க வேண்டிய சொத்துக்களை தக்க வைத்துக்கொள்ளக் கூடிய வாரம். சுய விடு வாங்க முயற்சி செய்யலாம். மங்களமான நாள். அரசு வாய்ப்பு தடைப்படும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். பயணம் அனுகூலம் தரும். திருமண முயற்சி வெற்றி தரும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். நல்லவர் நட்பு கிட்டும். எதிரிகள் பலம் குறையும். பிரார்த்தனையால் பலன் உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: பட்டத்தரசியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,Z




**மிதுனம்:** ஆணவத்தைத் தவிர்த்து அறிவை வெளிப்படுத்தக் கூடிய அற்புதமான வாரம். வெளிநாட்டுப் பயணம் உண்டு, கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். முன் கோபம் தவிர்க்கவும். பயணம் பலன் தரும். புதிய முயற்சியில் கவனம் தேவை. மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். வர்த்தக தொழில் லாபம் தரும். பதவி உயர்வு தடைப்படும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். சிரமங்கள் அதிகரிக்கும். பெற்றோர்களால் பாராட்டு பெறுவீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஹோரம்ப கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,8,2,9
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,X




**கடகம்:** அம்ச வலிமையோடு வம்ச விருத்தியாகக் கூடிய அற்புதமான வாரம். தொழில் லாபம் கூடும். புதிய எண்ணங்கள் உருவாகும்.வெகுமதி கூடும் நாள். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும். ஆடை அணிகலன் சேரும். மருத்துவச் செலவு உண்டு. பெண்களுக்கு கவனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: வீர அண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: 5,2,6,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,G




**சிம்மம்:** பணமும், தனமும் பக்குவமாகக் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெருமைகள் சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பணத்தேவை அதிகரிக்கும். எதிர்பார்த்த வி'யம் தாமதமாகும். புகழ் கூடும். அந்தஸ்து உயரும். உறவினர் ஒன்றுமை ஏற்படும். பொறுப்புகள் சிறப்பு சேர்க்கும். தனவரவு உண்டு. மனகசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஜலகண்டேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 8,2,5,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,D




**கன்னி:** சினமும், குணமும் சீராக அமையக்கூடிய சிறப்பான வாரம். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். சொத்து சேர்க்கை உண்டு. உழைப்பில் கவனம் தேவை. கோரிக்கை நிறைவேறும். மனை வாங்கும் யோகம் உண்டு. பொருளாதார வளம் மேம்படும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: தேவி செல்வநாயகி, அதிர்ஷ்ட எண்: 1,8,2,5
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,A




**துலாம்:** அச்சத்தைத் தவிர்த்து உச்சத்தைக் தொடக்கூடிய உன்னதமான வாரம். காதல் பிரிவை ஏற்படுத்தும். வீண் குழப்பங்கள் வந்து போகும். உடல் நலம் மேம்படும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். புதிய முயற்சிகள் கை கூடும். நண்பர்கள் உதவி கிட்டும். குடும்பத்தில் அமைதி உண்டு. அயல் நாட்டுப் பயணம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு அற்புதமான நாள். பித்ருக்கள் சாபம் நீங்கும். மங்களச் செய்தி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மாங்கல்யேஷ்வரர், அதிர்ஷ்ட எண்: 1,4,9,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,V




**விருச்சிகம்:** பெருமையான நிகழ்வுகளை அருமையாகச் சந்திக்கக்கூடிய அற்புதமான வாரம். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். வீண் செலவுகளை தவிர்ப்பது நல்லது. புதிய சிந்தனை உருவாகும். கண்ணாடிப் பொருட்கள் சேதமாகும். எதிர்ப்புகள் தவிடுப் பொடியாகும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். வெளி வட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வேண்டாத நபர்கள் விலகுவர்.
வழிபட வேண்டிய தெய்வம்: அன்னமார் சுவாமி, அதிர்ஷ்ட எண்: 4,2,7,0
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,Q




**தனுசு:** நுண்ணறிவைப் பயன்படுத்தி மென்மேலும் உயரக்கூடிய உன்னதமான வாரம். மனதில் மகிழ்ச்சி கூடும். நட்பு வட்டம் விரிவடையும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். பூர்வீக சொத்துக்கள் கிடைக்கும். உறவினர் வருகை உண்டு. பொறாமைகள் விலகும் நாள். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகள் தாமதமாகும். நீண்ட நாளைய நோய் விலகும். தொழில் முயற்சி வெற்றி தரும். நண்பர்கள் உதவி கிட்டும். சுபக்காரியங்கள் நடந்தேறும். இல்லத்தில் அமைதி பெருகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: படைவீட்டம்மன், அதிர்ஷ்ட எண்: 0,9,3,6
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,F




**மகரம்:** கிள்ளிக் கிடைக்கும் யோகத்தால் துள்ளிக் குதிக்கக்கூடிய அற்புதமான சாரம். புது முயற்சிகள் பலன் அளிக்கும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பாலிய நண்பர் சந்திப்பு கிட்டும். பொருளாதாரம் மேம்படும். பேச்சில் கவனம் தேவை. கடன் பாக்கிகள் வசூலாகும். வாகன யோகமுண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். சகோதர வழியில் கவனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: வேம்புலியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**கும்பம்:** பொறுமையுள்ள பெண்களுக்கு பெருமை சேரக்கூடிய அருமையான வாரம். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். அணிமணிகள் சேரும். பெண்களுக்கு யோகம் கூடும். பணப்புழக்கம் சரளமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஓம்கார சுயம்புலிங்கம், அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**மீனம்:** வேண்டாத நபர்களை விலக்கி வைக்க வேண்டிய விவேகமான வாரம்.. வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும் வாரம். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். ஜீவராசிகளுக்கு உணவு அளித்தால் யோக பலன் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பிரம்ம சக்தி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377



Preparation of Income Taxes
T1 and T2 with E/File

Location :
Unit 9- 40 Winges Road
Woodbridge, ON
L4L 6B2

Pearl Fortune Canada
Head Office
101 Laird Drive, Markham,
Ontario L3S 3N6
Office Number 905-554-5606
Fax Number 905-554-3236


Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

# சிவன் கோயிலுக்குக் கொடுப்பதால் கோடி நன்மை!

## சிவன் கோயில்களுக்குக் கொடுப்பதற்கு புண்ணிய பலன் வேண்டும்!

எந்தக் கோயிலும் கட்டலாம் எந்தக் கோவிலுக்கும் கொடுக்கலாம் ஆனால் சிவன்கோயில்களுக்குக் கொடுப்பதற்கு கோடி கோடியாகப் பணம் இருந்தலும் புண்ணிய பலன் உள்ளவர்களுக்கே கொடுக்கும் பாக்கியம் உண்டாம்

## நம்பனை(சிவனை) நம்பினார் கைவிடப்படார்!

நம்பனாகிய சிவபெருமானை நம்பி வழிபடுவோர் கெட்டுப்போனதாகவோ கைவிடப்பட்டதாகவோ சரித்திரமே இல்லை. தமிழ் பேரரசர்கள் எல்லோருமே சிவாலயங்களைக் கட்டித்தான் சிறப்போடு அரசாண்டார்கள். சிவனடியார்கள் சந்ததி பல தலைமுறைகள் சிறப்போடு வாழ்ந்தார்கள். சிறப்போடு வாழ்ந்து கொண்டும்தான் இருக்கிறார்கள். போர்ச் சூழலோ பஞ்சமோ கொடிய வருத்தங்கள் பரவினாலோ இப்படியான அனர்த்தங்கள் வந்தாலும் சிவனடியார்களுக்கு பாதிப்புக்கள் வராது. தங்கள் சொத்துக்களில் பெரும்பகுதியை சிவன் கோயில்களுக்கு கொடுத்தவர்கள் சந்ததிகள் சிறப்போடு வாழ்ந்தார்கள் சிறப்போடு வாழ்ந்து கொண்டும்தான் இருக்கிறார்கள்.

## செட்டிமார்கள் என்று சொல்லப்படுகின்ற வணிக குலத்தவர்கள் சிவாலயங்களைக் கட்டி சிவ வழிபாடு செய்து பெரும் செல்வந்தர்களாக வாழ்ந்தார்கள்!

ஒரு நாடு பொருள் வளம் கொண்டதாக இருப்பதற்கு வணிகம் மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. முத்தமிழ் பேரரசுகள் காலங்களில் தமிழர்கள் கடல் கடந்த வாணிபத்தில் சிறந்து விளங்கியபோதெல்லாம் சிவ வழிபாடே மேன்மையாக விளங்கியது. அந்தக் காலத்தில் மட்டுமல்ல இன்றும் தமிழகத்தில் செட்டிமார்கள் எனப்படும் வணிக குலத்தவர்கள் சிவாலயங்களைக் கட்டி வழிபடுவதை தமிழகத்தில் காணலாம்.

## செல்வத்துக்கு அதிபதி சிவ பக்தரான குபேரன்! மகாலட்சுமி குபேரனிடம் கடன் வாங்கியே மக்களுக்குக் கொடுக்கிறாள்!

குபேரனுக்கு சங்கநிதி பதுமநிதி கொடுத்து செல்வத்துக்கு அதிபதி ஆக்கினார் சிவபெருமான்! சிவனடியார்களுக்கு குபேரனே செல்வங்களை கொடுக்கிறார். மகா லட்சுமி குபேரனிடம் கடன்வாங்கியே மக்களுக்கு செல்வத்தை வழங்குகிறாள் அவளால் வழங்கும் செல்வமானது தற்காலிகமானது அடுத்த தலைமுறைக்கு நிற்பதில்லை. ஆனால் குபேரனால் சிவனடியார்களுக்கு வழங்கும் செல்வமானது பல தலைமுறைகளுக்கு நிலைக்கிறது. குபேரன் வடதிசையிலிருந்து சிவனை வழிபட்டு சிவனடியார்களுக்கு வற்றாத செல்வத்தை வழங்குகிறார்.

## சிவாலயங்களுக்குக் கொடுப்பது ஆயிரம் மடங்காக புண்ணிய பலனோடு திரும்பக் கிடைக்கிறது! பல தலைமுறைக்கும் சொத்து வளர்கிறது!

எந்தக் கோயிலும் கட்டலாம், எந்தக் கோவிலுக்கும் திருப்பணி செய்யலாம் ஆனால் சிவன் கோவில் கட்டுவதற்கும் சிவன் கோயில் திருப்பணி செய்வதற்கும் பல பிறவிகளில் செய்த புண்ணிய பலனாலேயே வாய்ப்புக் கிடைக்கிறது. சிவாலயங்களுக்குக் கொடுப்பதனால் கொடுக்கும் தொகை புண்ணிய பலனோடு ஆயிரம் மடங்காக திருப்பக் கிடைப்பதோடு பல தலைமுறைகளுக்கும் அந்தப் பலன் கிடைக்கிறது, பல பிறவிகளுக்கும் அந்தப் புண்ணிய பலன் கைகூடுகிறது.

## கனடாவில் வாழும் சைவ மக்களுக்கு இப்போது அரிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது!

கனடா பெரிய சிவன் ஆலய இடத்தை ஆலயத்துக்கு சொந்தமாக வாங்குவதற்கு உரிய நேரம் வந்துவிட்டது அதனை வாங்குவதற்கு உங்களால் ஆன பங்களிப்பைச் செய்து சிவன் பார்வதியோடு சகல தெய்வங்களின் பேருளைப் பெற்று அடுத்த சந்ததிகளுக்கும் வாழையடி வாழையாக சிறப்போடு வாழும் புண்ணிய பலனைப் பெற்றுக் கொடுத்து தேவர்களைப் போன்று வாழும் பேருளைப் பெறக் கடவீர்களாக

சைவத்தின் மேல் வேறு சமயம் இல்லை சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை

உங்கள் அன்புக்குப் பாத்திரமான சிவனடிமை
கலாநிதி அடியார் விபுலானந்தா
ஸ்தாபகர், தர்மகர்த்தா, கனடா பெரிய சிவன் ஆலயம்
ஸ்தாபகர் சைவ சமயத் தலைவர், உலக சைவத் திருச்சபை

## வட அமெரிக்காவிலே புனித திருத்தலமாக வளரும்

# பெரிய சிவன் ஆலயம்

## கேட்கும் வரங்களைக் கொடுத்துக் கொண்டிருப்பவளாம் உண்ணாமுலை அம்பிகையின் ஆலயம்

"சைவத் தமிழர்களே தன்மானம் காப்பவர்கள்"

## "சைவத் தமிழர்களால் மட்டுமே தமிழினத்தை முன்னேற்ற முடியும்"

**பெரிய சிவன் ஆலயம்**
1148 பெலாமிவீதி **(near Progress)** ஸ்காபரோ ( 2 minutes from 401 HWY )
(416) 769-7747, (416) 907-7434

- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்

# #12 சிவாஜியும் தமிழ்ச் சினிமாவும்

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது"

எனும் தெய்வப் புலவருடைய மெய்வாக்கிற்கொப்ப எங்கள் காலத்தில் வாழ்ந்து வரலாறு ஆகிவிட்டவரின் 111வது பிறந்த நாளான செப்டம்பர் 15 தமிழ்



மொழிப்பற்றும் இனமான உணர்வும் கொண்ட தமிழர்கள் அனைவரினாலும் நினைந்து வணங்கப்பட வேண்டிய பொன்னாளாகும். தமிழ் ஆண்டான சௌமிய ஆண்டில் பிறந்ததினால் "சௌமியன்- என புனைபெ-யரை சூட்டிக் கொண்டவர் மற்றும் "சமதர்மன்" - "சம்மட்டி" - "ஒற்றன்" - "பரதன்" - "ஆணி" எனும் வெவ்வேறு பெயர்களில் எழுதியும் - அரசியல் பேசி-யும் - சொற்பொழிவாளர்- எழுத்தாளர் - நூல் ஆசிரி-யர் - இதழாளர் - நடிகர் - சிந்தனையாளர் - தலைவர் - தமிழ்நாடு பெயர் சூட்டிய தமிழக முதல்வர் என புகழுக்குரிய அறிஞர். அண்ணா என எல்லோராலும் பேரன்புடன் நினைக்கப்படும் பெருமகனாரின் பிறந்தநாளில் அவரால் அடையாளம் காட்டப்பட்டு, அன்பு செலுத்தப்பட்ட நடிகர் திலகம் சிவாஜி கணேசனை, அவருக்கும் அண்ணாவிற்கும் உள்ள உறவை மீண்டும் ஒருமுறை நினைவு படுத்திப் பார்ப்பது பொருத்தமானதாகும். பேரறிஞர் அண்ணாவிற்கும் தனக்கும் உள்ள தொடர்பை பாசத்தை சிவாஜி பின்வருமாறு வெளிப்படுத்துகிறார்.

இந்த இருபதாம் நூற்றாண்டு கண்ட இணைந்த தலைவர்களுள் ஒருவர் பேரறிஞர் அண்ணா. அண்ணா அவர்களுடன் அல்லும் பகலும் உடனிருந்து பழகவும் பேசவும் பேறு பெற்றவர்கள் சிலர் தான் இருக்க முடியும். அந்த பெரும்பேறு எனக்கு கிடைத்ததை எண்ணி எண்ணிப் பெருமிதமடைகிறேன். தந்தை பெரியாரின் சீடனாக இருந்தபோது தான் அண்ணாவுக்கு அறிமுகமானேன். அண்ணாவிற்கு பரந்த கடல் போன்ற உள்ளம். எதிரி ஆனாலும் அவரை ஒழித்துக் கட்ட அவர் எப்போதும் எண்ணியதில்லை. பழிவாங்கும் கொடூர நெஞ்சம் அண்ணாவிடம் கிடையவே கிடையாது. ராஜா அண்ணாமலை மன்றத்தில் ஒரு சமயம் சிவாஜி நாடக மன்றம் கட்டபொம்மன் நாடகத்தை நடத்திய போது அதற்குத் தலைமை வகித்தவர் அறிஞர் அண்ணா அவர்கள். அப்போது சிவாஜி, காங்கிரஸ் ஆதரவாளராக இருப்பதையும் மறந்து, "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்ற மனப்பான்மையோடு... " மார்லன் பிராண்டோவை நினைவுபடுத்தும் தம்பி கணேசன் நடிப்பில் மெய்மறந்திருந்தேன்! கட்டபொம்மனையே நேரில் கண்டேன்! உலகத்தில் உள்ள நடிகர்களுக்கெல்லாம் சிறந்தவராக திகழ்கின்ற சிவாஜி என் தம்பி, என்பதில் நான் பெருமை அடைகிறேன். அவர் எங்கிருந்தாலும் வாழ்க! என்று வாழ்த்துகிறேன்!" என வாழ்த்தினார்.

இன்னொரு சமயம் ஏவிஎம் தயாரித்த சிவாஜியின் 125 வது படமான "உயர்ந்த மனிதன்" நூறாவது நாள் விழா மயிலை ராஜேஸ்வரி மண்டபத்தில் நடந்தது. மத்திய உள்துறை அமைச்சர் வை.பி சவான் தலைமை தாங்க, விழாவைத் தொடங்கி வைத்த முதலமைச்சரான அண்ணா, "சூரியனின் ஒளியை கையால் மறைத்து யாரும் இருட்டடிப்பு செய்துவிட முடியாது. நொடிப்பொழுதில் மேக மூட்டத்தில் மறைந்திருந்தால் சூரிய ஒளி மங்கி நிற்கும், அவ்வளவுதான். அதேபோல் ஒரு திறமைசாலியை அவனது வெற்றியை யாரும் தடுத்து நிறுத்திவிட முடியாது சிவாஜி கணேசனை அறிமுகப்படுத்திய படம் "பராசக்தி" தான் வேறு எவரும் இல்லை. "பராசக்தி" படம் தயாராகாமல் இருந்தாலும் சிவாஜி கணேசன் தன் திறமையான நடிப்பால் இன்னொரு படத்தின் மூலம் நிச்சயம் ஒளிவிட்டு பிரகாசித்திருப்பார்"! என அந்த விழாவில் தம்பி கணேசனின் திறமையை மனம் திறந்து பாராட்டினார் அண்ணா!

நமது நடிகர் திலகம், தான் "சிவாஜி" ஆன கதையை கூறும்போது, "திராவிடநாடு" அலுவலகத்தில் நாங்கள் இருக்கும்போது சாப்பிட்டுவிட்டு சும்மா இருக்கவில்லை. நாங்கள் பிரின்டிங் மெஷினை கையால் தான் சுற்றுவோம். அச்சுக் கோத்தலில் எழுத்துக் கோர்போருக்கு உதவி செய்வோம். அண்ணா அவர்களிடம் பெரிய சிறப்பு என்னவென்றால், பேனாவைப் பேப்பரில் வைத்தால் அந்தப்பக்கம் முடியும் வரையில் எடுக்கவே மாட்டார்கள். எழுதி எழுதி போட்டு கொண்டே இருப்பார்கள். நான் அருகில் உட்கார்ந்து ஒவ்வொன்றாக பக்கம் போட்டு அடிக்கி கொடுப்பேன். அந்த சமயத்தில் தான் "சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்" நாடகத்தை



அண்ணா அவர்கள் எழுதினார். அதில் எம்.ஜி.ஆர் அவர்கள் சிவாஜி கேரக்டரை நடிப்பதாக இருந்தது. ஆனால் என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, அந்த நாடகத்தில் எம்.ஜி.ஆர் நடிக்க முடியாது என்று கூறிவிட்டார். நாடக பொறுப்பேற்றிருந்த டிவி நாராயணசாமி (பராசக்தியில் பண்டரிபாயின் அண்ணாவாக வருபவர்) அண்ணாவிடம் வந்து "எம்ஜிஆர்" நடிக்க முடியாது, என்று கூறி விட்டதாக சொன்னார். உடனே இருவரும் யோசனை செய்தார்கள். அவர்கள் பார்வைக்கு நான்தான் தென்பட்டேன். எனக்கு தான் கொக்கு போல் பெரிய மூக்கு இருக்குமே. எனக்கு தாடி வைத்தால் நன்றாக இருக்குமே, என்று அண்ணா நினைத்தார் போலிருக்கிறது. உடனே என்னை பார்த்து கணேசா நீ சிவாஜியாக நடிக்கிறாயா என்று கேட்டார்!

"சிவாஜி எங்கே! நான் எங்கே! என்னால் முடியுமா என்றேன்" நீ முயற்சித்துப் பார், உன்னால் முடியும் என்றார் அண்ணா. மேலும் அவர் எழுதிய 90 பக்க நாடக வசனங்களை என்னிடம் கொடுத்து "நான் வீட்டிற்கு சென்று ஓய்வு எடுத்து விட்டு மாலை வருகிறேன். நீ இதைப் படித்து வைத்து எப்படி பேசுகிறாய் என்று பார்ப்போம்" என்றார்.

காலை 11 மணிக்கு வீடு திரும்பியவர், மாலை 6 மணி அளவில் என் இடத்திற்கு வந்தார். அண்ணாவுடன் தங்கவேலு - பூட்டாசாமி மற்றும் காஞ்சிபுரம் எம்.எல்.ஏ

(தொடர்ச்சி 20ம் பக்கம்)



# "கொரோனாவுக்கான சிகிச்சையில் கபசுரக்குடிநீர் சிறந்த பங்காற்றுகிறது"

## - ஆய்வில் வெளியான தகவல்

இன்றைய தேதியில் 43 லட்சத்தை எட்டி, கொரோனா பாதிப்பில் உலக அளவில் 2-ம் இடத்திற்கு வந்து விட்ட இந்தியாவில் மராட்டியம் முதல் இடத்திலும், தமிழகம் அடுத்த இடத்திலும் உள்ளன. தமிழகத்தில் ஊரடங்கு தளர்வுகள் 75 சதவீதம் வரை நீக்கப்பட்டு, பொது போக்குவரத்தும் தொடங்கப்பட்டு விட்ட நிலையில் கொரோனாவை கட்டுப்படுத்தி விட முடியும் என்று அரசு நம்புகிறது.

இதுவரை 4.69 லட்சம் பேர் பாதிக்கப்பட்டதில், 4.10 லட்சம் பேர் குணம் அடைந்துள்ளனர்.

துணை நிற்கும் பாரம்பரிய மருத்துவம்

கேரளாவில் கொரோனா சிகிச்சையில் நவீன மருத்துவத்துடன் ஆயுர்வேதம் துணை நின்றது போல், தமிழகத்தில் சித்த மருத்துவம் துணை மருத்துவமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. அறிகுறிகள் இன்றியும் (Asymptomatic), மிதமான பாதிப்புகளுடனும் வருபவர்களுக்கு நவீன மருத்துவத்துடன் சித்த மருத்துவ சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. சென்னை, சிவகங்கை, திருச்சி போன்ற இடங்களில் கொரோனாவுக்கு சித்த மருத்துவ வார்டுகள் தனியாக அமைக்கப்பட்டு சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன.

கொரோனா நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சித்த மருந்துகளில் பிரதானமாக இடம் பெறுவது, கபசுரக்குடிநீராகும். இது கொரோனாவுக்கான மருந்து இல்லை பொதுவாக பலவகை வைரஸ்களால் ஏற்படும் காய்ச்சல், சளி, சுவாசப்பிரச்சினை போன்றவற்றுக்காக காலம் காலமாக பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு மருந்து ஆகும். தற்போது கொரோனாவால் ஏற்படும் பாதிப்புகள் இதை ஒத்தே இருப்பதால் கபசுரக்குடிநீரையும் பயன்படுத்தலாம் என்று, மத்திய அரசின் "ஆயுஷ்" அமைப்பு பரிந்துரைத்துள்ளது.

அலோபதி-சித்தா ஒருங்கிணைந்த ஆய்வு

தமிழ்நாட்டில் அரசு சித்த மருத்துவக்கல்லூரிகள், சென்னை அண்ணாநகரிலும், நெல்லை பாளையங்கோட்டையிலும் உள்ளன. இவற்றில், பாளை. சித்த மருத்துவக்கல்லூரியில் மிதமான பாதிப்பு உள்ள கொரோனா நோயாளிகள் அனுமதிக்கப்பட்டு, குணம் அடைந்து திரும்பிக்கொண்டு இருக்கிறார்கள். தீவிர பாதிப்பு உள்ளவர்களும், மூச்சுத்திணறல் ஏற்பட்டு ஆக்சிஜன் தேவைப்படுபவர்களும் நெல்லை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

இந்த நிலையில் கொரோனா சிகிச்சையில் கபசுரக்குடிநீர் எந்த அளவு செயலாற்றுகிறது என்பதை அறிய, ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. அரசின் அனுமதியுடன், பாளை. அரசு சித்த மருத்துவக்கல்லூரியும், நெல்லை அரசு மருத்துவக்கல்லூரியும் இணைந்து இவ்வாய்வில் பங்கேற்றன.

கொரோனா பரிசோதனையில் பாசிட்டிவ் வந்து, நெல்லை அரசு மருத்துவக்கல்லூரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் 45 பேர் அவர்கள் சுயவிருப்பத்தின்பேரில் இந்த ஆய்வுக்கு தேர்வு செய்யப்பட்டனர். அவர்களில் 26 பேர் ஆண்கள்மீதி 19 பேர் பெண்கள். இந்த 45 பேரில் 35 பேர் கொரோனா அறிகுறி எதுவும் தென்படாதவர்கள் மற்ற 10 பேர் மிதமான அறிகுறிகளோடு வந்தவர்கள். (நீரிழிவு, இதயநோய், புற்றுநோய் உடையவர்களும், உள்ளுறுப்புகள் பாதிக்கப்பட்டோரும், கர்ப்பிணிகளும் இந்த ஆய்வில் சேர்க்கப்படவில்லை).

ஆறே நாளில் நெகட்டிவ்



ஆய்வுக்கு தேர்வான 45 பேருக்கும் தினமும் 60 மில்லி கபசுரக்குடிநீரும், அதிமதுர மாத்திரையும் வழங்கப்பட்டன. வேறு அலோபதி மருந்துகள் எதுவும் வழங்கப்படவில்லை. 5 நாட்கள் சித்தமருந்து சாப்பிட்டபின், 6-ம் நாள் இவர்களுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில், 32 பேருக்கு கொரோனா நெகட்டிவ் என முடிவு வந்தது. மீதி 13 பேருக்கும் தொடர்ந்து கபசுரக்குடிநீரும், அதிமதுர மாத்திரையும் வழங்கப்பட்டன. அவர்களுக்கு 10-ம் நாள் நடத்தப்பட்ட பரிசோதனையில் கொரோனா நெகட்டிவ் என முடிவு வந்தது. ஆக, வைரஸ் தொற்று நீங்கி, 45 பேருமே குணம் அடைந்து வீடு திரும்பி விட்டனர்.

நெல்லை அரசு மருத்துவக்கல்லூரி தரப்பில் டீன் ரவிச்சந்திரன், டாக்டர்கள் ரதிதேவி, எழில்ரம்யா, சாந்தாராமன் ஆகியோரும் சித்த மருத்துவக்கல்லூரி தரப்பில் மருத்துவர்கள் கோ. சுபாஷ்சந்திரன், ஜஸ்டஸ் அந்தோணி, விக்டோரியா ஆகியோரும் இந்த ஆய்வை நடத்தி முடித்தனர். இந்த ஆய்வின் மூலம் வைரஸ் பரவாமல் தடுத்து, காய்ச்சலைத்தணித்து சளியை வெளியேற்றுவதில் கபசுரக்குடிநீர் சிறந்த பங்காற்றுவது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி, டாக்டர் சுபாஷ்சந்திரன் குறிப்பிடுகையில், "கபசுரக்குடிநீர், நோய் எதிர்ப்பாற்றலை அதிகரித்து, நுரையீரலில் தேங்கும் கபத்தை (சளி) அகற்றி வெளியேற்றுவதன் மூலம் சுவாசத்தடை நீங்கி நிவாரணம் கிடைக்கிறது" என்றார்.

இந்த ஆய்வு இத்துடன் நின்று விடாமல் அடுத்தடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லப்படுவதன்மூலம், மனித குலத்தை அச்சுறுத்தும் புதுப்புது நோய்களுக்கு தீர்வு காணமுடியும் என்பதில் ஐயமில்லை.

15 மூலிகைகளின் கலவை

கபசுரக்குடிநீர் என்பது 15 வகை மூலிகைகளின் கலவையாகும். அந்த 15 மூலிகைகள் வருமாறு: சுக்கு, திப்பிலி, இலவங்கம், சிறுகாஞ்சொறி வேர், அக்கிரகார வேர், முள்ளி வேர், கடுக்காய்த் தோல், ஆடாதொடை இலை, கற்பூரவள்ளிஇலை, கோர்'டம், சீந்தில் தண்டு, சிறு தேக்கு, நிலவேம்பு சமூலம், வட்டத்திருப்பிவேர், கோரைக்கிழங்கு. இவற்றை சம அளவு சேர்த்து கபசுரக்குடிநீர் தயாரிக்கப்படுகிறது.

தற்போது கொரோனா பீதி காரணமாக சிலர் கையில் கிடைக்கும் மூலிகைகளைக் கொண்டு தயாரித்து கபசுரக்குடிநீர் என்ற பெயரில் விற்க ஆரம்பித்து விட்டனர். மக்கள் அதை நம்பக்கூடாது. அங்கீகரிக்கப்பட்ட கபசுரக்குடிநீரை மட்டும் சித்தமருத்துவர்கள் பரிந்துரையின்பேரில் வாங்கி அளவாகப் பயன்படுத்துவதே நல்லது என்பது குறிப்பிடத்தக்கது.

**- மணிராஜ், திருநெல்வேலி**







# MONEY PROBLEMS?
## பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CRP PLAN

**0%வட்டி**

**அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்**

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




**தமிழில் தொடர்புகளுக்கு:**

**வசந்தி சிவராஜா - 416-616-3077**

**எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்**

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

**416-671-0577**

**4 இடங்களில் சேவை**
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga


**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York






# TORONTO ASTROLOGER & PSYCHIC
## Pandit: ARJUN
### 9 TIMES MORE POWERFUL THAN OTHER ASTROLOGERS



**VEDIC SOLUTIONS AVAILABLE FOR:**

* Health * Education * Family * Job
* Marriage * Divorce * Love * Childless
* Business * Promotion * Husband-Wife Couples
* Lucky Numbers * Court Etc

**REMOVES BLACK MAGIC & EVIL SPIRITS & GIVES 100% PROTECTION**

No Person in the World is Without Problems. Meet the Pandit once and see your Future Changing for GOLDEN & BRIGHT FUTURE

**100% Guarantee**

He can perform Devi upasana Lakshmi Pooja Shanthi Pooja (Prayers) and all so protection from enemies and jealousy

**PRIVATE & CONFIDENTIAL**

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் **Pandit: Arjun** சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முக நாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்..!

கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமைகளில் இலவசமாக நூல் கட்டப்படும்

- கைரேகை
- நாம சட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- பெண்பிள்ளைகள் - பெற்றார் பிரச்சனைகள்
- நீதிமன்ற வழக்குகள்
- திருமண யோகம்
- குழந்தைப் பாக்கியம்
- சர்ப்ப தோஷம்
- கர்ப்பதோஷம்
- கஸ்ட - நஸ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்று கூடுதல்

அகோரா சாமயாாகளடம செனறு மநதரஙகள கறறு கொணட ஓம பரகாஷ

**2607 Eglinton Ave East, Scarborough ON, M1K 2S2**
**UPSTAIRS ERA SUPERMARKET , (BRIMLEY & EGLINTON)**

# Call: 416-722-9498

# GRAND OPENING CEREMONY of the Majestic City, the Largest South Asian Indoor Shopping Mall in Canada

# ஸ்காபுறோவில் Majestic City என்னும் பிரமாண்டமான தென்னாசிய வர்த்தக வளாகம் திறந்து வைக்கப்பெற்றது












கனடாவில் ஈழத்தமிழ் மக்கள் பெருமளவில் வாழும் பகுதியான மார்க்கம்-ஸ்காபுறோ ஆகிய நகரங்கள் இணையும் பகுதிக்கு மிக அண்மையில் ஒரு தென்னாசிய வர்த்தக வளாகம் திறந்து வைக்கப்பெற்றது.

திரு கிறிஸ் சிவக்கொழுந்து என்னும் தமிழ் பேசும் அன்பரைத் திட்ட முகாமையாளராகக் கொண்டு நீண்ட நாடகள் கடுமையாக அர்ப்பணிப்புடன் உழைத்து இந்த வர்த்தக வளாகம் நிஜமாகியுள்ளது.

ஸ்காபுறோ நகரில் Majestic City என்னும் பெயரில் திறக்கப்பட்டுள்ள இந் தபிரமாண் டமான தென்னாசிய வர்த்தக பெருநிலையம் கடந்த சனிக்கிழமையன்று திறந்து வைக்கப்பெற்றது.

பிரதம விருந்தினராக ஒன்றாரியோ மாகாண அரசின் முதியோர் மற்றும் அவர்களின் வசதிகள் பேணல் அமைச்சரும் தமிழ் மக்களின் நண்பருமான கௌரவ ரேமண்ட் சோ அவர்கள் தனது ஏனைய மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சகிதம் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார்.

சுமார் 180 வர்த்தக நிலையங்களைக் கொண்ட இந்த Majestic City வர்த்தக வளாகம் மிகவிரைவில் நன்கு வளர்ச்சி பெற்ற ஒன்றாக மி-ளிரும் என்றும் அங்கு கலந்து கொண்ட அனைத்து பிரமுகர்களும் வாழ்த்திச் சென்றனர்.

பல ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பிரதம ஆசிரியர்களும் வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களின் பிரதிகளும் கலந்து கொண்டு உற்சாகம் ஊட்டினர்.

ஸ்காபுறோ நகரில் மார்க்கம்- மெக்னிக்கல் சந்திப்புக்கு அருகி-ல் இந்த பிரமாண்டமான ஆயதநளவஉை ஊவைல வர்த்தக வளாகம் காட்சிகளிக்கின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.

*கனடா உதயன் செய்திப் பிரிவு.*

---

**(17ம் பக்கத் தொடர்ச்சி)**

## சிவாஜியும் தமிழ்ச் சினிமாவும்

வாக இருந்த ராஜகோபாலன் ஆகிய மூவரும் உடன் இருந்தார்கள். கணேசா பாடம் படித்தாயா, என்றார் அண்ணா. நான் "அண்ணா இப்படி உட்காருங்கள்" என்று கூறி அவர் எழுதிக் கொடுத்த வசனங்களை பேசியும் நடித்தும் காண்பித்தேன். அண்ணா அவர்கள் என்ன செய்தார் தெரியுமா! அப்படியே ஓடி வந்து கட்டி அணைத்து உச்சி முகர்ந்தார். கண்களில் நீர் மல்க, "நீ இதை ஏழே மணி நேரத்தில் மனப்பாடம் செய்து விட்டாயே! நீதான் சிவாஜி என்றார்!

நாடகம் மூன்று மணி நேரம் நடந்தது. அண்ணா "காகபட்டராகவும் நான் சிவாஜியாகவும் என்னை எதிர்ப்பவர் ஆக டிவி நாராயணசாமியும் நடித்தோம். நாடகத்திற்கு தலைமை ஏற்ற பெரியார் பேசும்போது, "நான் பத்து மாநாட்டில் சொல்ல வேண்டிய கருத்துக்களை அண்ணா ஒரே நாடகத்தில் கூறிவிட்டார்" என்று பாராட்டிப் பேசினார். யாரோ ஒரு சின்னப் பையன் சிவாஜி வே'த்தில் குறுக்கும் நெடுக்கும் ஓடிக் கொண்டிருந்தான் அவன் யார்? என்று தேடினார். அதற்கு அவன் நமது கணேசன் என அவர் முன் கூட்டிச்சென்று நிறுத்தினார்கள். "நீதான் கணேசனா? இன்று முதல் நீ சிவாஜி!" என்றார். என்னுடைய வாழ்க்கை மேலே உயர்வதற்கு எவ்வளவு உறுதுணையாக இருந்தது அந்த பெயர். தந்தை பெரியார் அவர்கள் எனக்கு போட்ட பிச்சை. இவ்வாறு தனது சுயசரிதையில் நினைவுகூர்கிறார் நடிகர் திலகம்.

இதோ அண்ணா எழுதிய சத்ரபதி சிவாஜி மன்னனுக்கு எழுதிய உரையாடல். இயக்குனர் பி.மாதவன் அவர்கள் இயக்கிய "ராமன் எத்தனை ராம-ணடி" திரைப்படத்தில் (1970) ஓரங்க நாடகமாக இடம் பெற்ற காட்சியில் நடிகர் திலகம் சிவாஜி மன்னனாக பேசிய உரையாடலில் சில பகுதியை இங்கு பதிவு செய்கிறேன்.

(சிவாஜி முடி சூட்டுவது தடுக்கப்படுகிறது. இதை அறிந்ததும் மாவீரன் சிவாஜி மனம் கொதித்து கர்ஜிக்கிறான்)

சிவாஜி: "... இந்த நாடு என் சொந்த நாடு. இந்த மக்கள் என் சொந்த மக்கள். உயிரினும் இனிய என் மக்களுக்காக ஓடினேன் பகைவரைத் தேடினேன் வாள் கொண்டு சாடினேன் வெற்றியை நாடினேன்! பகை தேடி வெல்ல மட்டும் உரிமை உண்டாம் முடி சூட்டிக்கொள்ள மட்டும் தடை செய்வாராம்.

அரசியலை நான் அறியாதவனா? ஆ...ஹஹ்ஹா! அரசு வித்தைகள் புரியாதவனா...? எவனோ வந்தவன் சொன்ன வாய்ப்பறை கேட்டு நொந்து போக நான் நோயாளி அல்ல! என்னை விட்டொருவன் இந்த தரணியாளும் தகுத-ியை அடைந்து விட்டானா? ஏமாந்த மக்களிடம் ஏற்றம் கொண்டு, .... நாமே தான் நாடென்று தலைதூக்கித் திரியும் அந்த புல்லுருவிகள் எனது முடியை தடுக்கின்றார்களா?

அதோ மேர்னா... கொட்டிய முரசும் கூவிய படையும் எட்டிய பரியும் எழுந்து நடந்து... கோட்டை மதிலை சுற்றி வளைத்து வேட்டையாடி வெற்றி படைத்து வாழ்க சிவாஜி வாழ்கவென்று வாழ்த்துரை கூறி வழங்கியபோது ஓஹோ என்று எதிரொலித்தது இந்த கோட்டைதான்....

அதோ ஆட்சிபீடம் தெரிகிறது.

இதோ அதன் முதல் படி

படியல்ல இது..!

என் அன்னையின் மடி...

தொடர்ச்சியான உரை வீச்சை மீண்டும் திரையில் கண்டு... கேட்டு மகிழுங்கள்!

சிவாஜி தமிழை ரசியுங்கள்! அண்ணாவின் தமிழை வாசியுங்கள்!

மராட்டிய மன்னன் வீர சத்ரபதி சிவாஜியாக வேடமேற்று நடித்த நமது சிவாஜி அவர்களை மராத்திய மாநில மக்களும், அம்மாநில கலைஞர்களும் பெரிதும் மதிப்பவர்கள். அதுமட்டுமல்ல பம்பாயில் சிவாஜி திடலில் இருக்கிற பெரிய சிவாஜி சிலையை அமைக்க முக்கால்வாசி பணம் கொடுத்தவர் நமது நடிகர் திலகம் தான்! பம்பாயில் உள்ள பல சிவாஜி சிலைகள் அமைக்க பொருளுதவியும் செய்த சமாச்சாரம் பலருக்குத் தெரியாது. பம்பாய் வாசிகள் சிவாஜி அவர்களை மராத்தியர் என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏன் சிவசேனா இயக்கத்தவர்கள் கூட "சிவாஜிராவ்" என்றே நடிகர் திலகத்தை அழைப்பார்கள்.

*- காட்சிகள் விரியும் . அடுத்த வாரம் சந்திப்போம்! - வீணை மைந்தன்*

# ஈழத்துத் திருக்கோவில்கள் 912



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
416-332-0269 vasantha@rogers.com



## செட்டிபாளையம் சோமநாதலிங்கேஸ்வரர் சோமகலாநாயகி கோயில்

### – மட்டக்களப்பு –

உலகிலே வழங்கும் முதன்மையான சமயங்களுள் முதல் வரிசையிலே வைத்து எண்ணத்தக்கதாக சைவசமயம் காணப்படுகின்றது. சைவம் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயமாகும். ஆகவே சைவம் என்பது காரணப் பெயராக விளங்குகின்றது. கி.மு 5000 ஆயிரம் ஆண்டுகளுக்கு மன்னரே பாரதநாட்டில் சிவலிங்க வழிபாடு நிலைபெற்றிருந்தது. இதனை சிந்துவெளியிலே மேற்கொள்ள்பட்ட ஆராய்ச்சிகள் நன்கு புலப்படுத்தியுள்ளன.

தொன்மையான சிவ வழிபாடு உலகம் முழுவதும் பரவி இருந்துள்ளது. இதற்குச் சான்றாக மேலைநாடுகளிலும், கீழைத்தேசங்களிலும் ஆங்காங்கே அருகிக் காணப்படுகின்ற சிவலிங்கத் திருவுருவங்களே சாட்சியாக உள்ளன. சைவசமயம் தோன்றிய காலம் இல்லாது அநாதியானதாகக் காணப்படுகின்றது. உலகம் படைப்பப்படும்பொழுதே இச்சமயம் தோன்றியதாக ஞானிகள் கூறிச் சென்றுள்ளனர்.

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகவும், விநாயகர், முருகன், அம்மன் வடிவங்களை அவரின் அருள் மூர்த்தங்களாகவும் அவரவர் தன்மைக்கேற்ப வழிபாடு செய்து வருகின்றனர். மட்டக்களப்பிலே அசாரத்தோடு கூடிய, கட்டப்பாடற்ற வகையில் தமது இஷ்ட தெய்வத்தைப் பூசித்து, பக்தி செய்து தமக்கு வேண்டும் வாழ்வியல் நலன்களையும், ஆன்மீக நலன்களையும் பெறுகின்றனர். எத்தகைய அருள் மூர்த்தங்களை வழிபட்டாலும் அனைவருக்கும் சிவபெருமானது திருவருட்பொலிவு கிடைக்கின்றது "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்றும், "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி அங்கே மாதொரு பாகனார் தாம் வருவார்" என்றும் கூறப்பட்டமை மேற்கூறிய கூற்றிற்குச் சான்றாகும்.

பண்டைய மட்டக்களப்பு தமிழக சைவமக்கள் முருகக்கடவுளுக்கும், விநாயகக் கடவுளுக்கும் காட்டும் வழிபாட்டின் மூலமே சிவனை வணங்கப் பெற்றனர்.

இதற்கு எடுத்தக்காட்டாகக் காணப்படுபவை கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயிலும், மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் கோயிலுமாகும். கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயிலில் ஆதியில் முருக வழிபாட்டுப்படியே பூசைகள் நடைபெற்று வந்துள்ளன. பின்னர் அந்நிலையில் மாற்றம் ஏற்பட்டு, சிவன் கொயிலாக மாற்றம் பெற்றது.

மட்டக்களப்பு மாமாங்கேச்சரம் கொயில் சிவன்கோயிலாக இருந்தபோதிலும் விநாயகா வழிபாட்டு முறையே இங்கு பின்பற்றப்படுகின்றது. இவ்விரண்டு கொயில்களின் கருவறையிலும் சிவலிங்கமே காணப்படுவதால் இவற்றை சிவன் கொயில் என்றெ கொள்ள் வேண்டும். இவ்விரண்டு கொயில்களும் ஈச்சரம் என்றே அழைக்கப்படுகின்றன. இவ்வழக்கு சிவன்கோயில்களுக்கு மட்டுமே காணப்படும் வழக்காகும். முாமாங்கேச்சரத்தில் மூலத்தானத்திலுள்ள சுயம்பு லிங்கத்திற்கு விநாயகருடைய அங்கியை அணிவித்தே வணங்கி வருகின்றனர். இதனால் இக்கோயிலை மாமாங்கப் பிள்ளையார் கோயில் என அழைக்கின்றனர்.

இவ்வாறு மட்டக்களப்புப் பிரதேசத்திலே காணப்படும் சிவன் கோயில்கள் மாற்றம் பெற்றுள்ளன. இந்நிலையில் செட்டிபாளையம் சோமநாத இலிங்கேஸ்வரர் சோமகலாநாயகி கோயில் மட்டக்களப்பிலுள்ள சிவன்கோயிலாக விளங்குகின்றது.

இக்கோயில் மட்டக்களப்பிலிருந்து கல்முனைக்குச் செல்லும் பிரதானபாதையில் மட்டுநகரின் தெற்கே பன்னிரண்டு மைல் தொலைவில் செட்டிபாளையம் என்னும் அழகிய கிராமம் அமைந்துள்ளது. செட்டிமார் பாளையமிட்டுத் தங்குமிடம் என்ற கருத்தில் இவ்வூரின் பெயர் அமைந்துள்ளது. இக்கிராமம், வடக்கே குருக்கள் மடம் என்னும் கிராமத்தினையும், தெற்கே மாங்காடு என்னும் கிராமத்தினையும், கிழக்கே வங்காள விரிகுடாக் கடலையும், மேற்கே மட்டக்களப்பு வாவியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. நெய்தலும், மருதமும் ஒருங்கே கொண்ட கிராமமான செட்டிபாளையம் திகழ்கின்றது.

செட்டிபாளையம் மகா வித்தியாலயம் அமைந்துள்ள சந்தியிலிருந்து கிழக்கே சுமார் ஐம்பது யார் தொலைவில் சோமநாத இலிங்கேஸ்வரர் சோமகலாநாயகி கோயில் காணப்படுகின்றது. கடற்கரை சார்ந்த கோயிலாகக் காணப்படுவதால், கோயில் வீதியெங்கும் வெண்மணற் பரப்பாகக் காணப்படுகின்றது. கோலிலிருந்து சுமார் அரை மைல் தொலைவில் ஆர்ப்பரிக்கும் கடல் கண்ணுக்குத் தெரியும்.

இக்கோயில் கல்லாலான கோயிலாக விளங்குகின்றது. மடாலய அமைப்பிலேயே இவ்வாலயம் காட்சி தருகின்றது. கோயிலின் கருவறையில் மூலமூர்த்தியாக சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இச்சிவலிங்கத்தினை இந்தியாவிலிருந்து ஸ்ரீலஸ்ரீ சோமேஸ்வரானந்தகிரி சுவாமிகள் தருவித்தார்.

*தொடரும்...*



# அன்பின் தொனி - 577

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

**தேவரீர் என் பாவத்தின் தோக்ஷத்தை மன்னித்தீர்.**

எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான். எவனுடைய அக்கிர மத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ, அவன் பாக்கிய வான். நான் அடக்கிவைத்தமட்டும், நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று. இரவும் பகலும் என்மேல் உம்மு டையகை பாரமாயிருந்ததினால், என் சாரம் உஷ்ணகால வறட்சிபோல வறண்டுபோயிற்று. நான் என் அக்கிரமத்தை மறை க்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன், என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன், தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர். இதற்காகச் சகாயங்கிடைக்குங் காலத்தில் பக்தியுள்ளவனெவனும் உம்மை நோக்கி விண்ணப்பஞ்செய்வான், அப்பொழுது மிகுந்த ஜலப்பிரவாகம் வந்தாலும் அது அவனை அணுகாது. நீர் எனக்கு மறைவிடமாயிருக்கிறீர், என்னை நீர் இக்கட்டுக்கு விலக்கிக்காத்து, இரட்சணியப் பாடல்கள் என்னைச் சூழ்ந்துகொள்ளும்படி செய்வீர். நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன், உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன். வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய்கட்டப்பட்டாலொழிய, உன் கிட்டச்சேராத புத்தியில்லாக் குதிரையைப்போலவும் கோவேறு கழுதையைப்போலும் இருக்கவேண்டாம். துன்மார்க்கனுக்கு அநேக வேதனைகளுண்டு, கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்துகொள்ளும். நீதிமான்களே, கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள், செம்மையான இருதயமுள்ளவர்களே, நீங்கள் எல்லாரும் ஆனந்தமுழக்கமிடுங்கள். **- சங்கீதம் 32: 1-11**

**கர்த்தர் வானத்திலிருந்து நோக்கிப் பார்த்து, எல்லா மனுபுத்திரரையும் காண்கிறார்.**


நீதிமான்களே, கர்த்தருக்குள் களிகூருங்கள், துதிசெய்வது செம்மையானவர்களுக்குத்தகும். சுரமண்டலத்தினால் கர்த்தரைத் துதித்து, பத்து நரம்பு வீணையினாலும் அவரைக் கீர்த்தனம்பண்ணுங்கள். அவருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள், ஆனந்தசத்தத்தோடே வாத்தியங்களை நேர்த்தியாய் வாசியுங்கள். கர்த்தருடைய வார்த்தை உத்தமமும், அவருடைய செய்கையெல்லாம் சத்தியமுமாயிருக்கிறது. அவர் நீதியிலும் நியாயத்திலும் பிரியப்படுகிறார், பூமி கர்த்தருடைய காருணியத்தினால் நிறைந்திருக்கிறது. கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது. அவர் சமுத்திர ஜலங்களைக் குவியலாகச் சேர்த்து, ஆழமான ஜலங்களைப் பொக்கிஷவைப்பாக வைக்கிறார். பூமியெல்லாம் கர்த்தருக்குப் பயப்படுவதாக, உலகத்திலுள்ள குடிக ளெல்லாம் அவருக்கு அஞ்சியிருப்பதாக. அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும். கர்த்தர் ஜாதிகளின் ஆலோசனையை விருதாவாக்கி, ஜனங்களுடைய நினைவுகளை அவமாக்குகிறார். கர்த்தருடைய ஆலோசனை நித்திய காலமாகவும், அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாகவும் நிற்கும். கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வமாகக்கொண்ட ஜாதியும், அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது. கர்த்தர் வானத்திலிருந்து நோக்கிப் பார்த்து, எல்லா மனுபுத்திரரையும் காண்கிறார். தாம் வாசமாயிருக்கிற ஸ்தானத்திலிருந்து பூமியின் குடிகள் எல்லார் மேலும் கண்ணோக்கமாயிருக்கிறார். அவர்களுடைய இருதயங்களையெல்லாம் அவர் உருவாக்கி, அவர்கள் செய்கைகளையெல்லாம் கவனித்திருக்கிறார். எந்த ராஜாவும் தன் சேனையின் மிகுதியால் இரட்சிக்கப் படான், சவுரியவானும் தன் பலத்தின் மிகுதியால் தப்பான். இரட்சிக்கிறதற்குக் குதிரை விருதா, அது தன் மிகுந்த வீரியத்தால் தப்புவியாது. தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கி விடு விக்கவும், பஞ்சத்தில் அவர்களை உயிரோடே காக்கவும், கர்த்தருடைய கண் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கிறது. நம்முடைய ஆத்துமா கர்த்தருக்குக் காத்திருக்கிறது, அவரே நமக்குத் துணையும் நமக்குக் கேடகமுமானவர். அவருடைய பரிசுத்த நாமத்தை நாம் நம்பியிருக்கிறபடியால், நம்முடைய இருதயம் அவருக்குள் களிகூரும். கர்த்தாவே, நாங்கள் உம்மை நம்பியிருக்கிறபடியே உமது கிருபை எங்கள்மேல் இருப்பதாக. **- சங்கீதம் 33: 1-22**

**கர்த்தருடைய பரிசுத்தவான்களே அவருக்குப் பயந்திருங்கள்.**

கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன், அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும். கர்த்தருக்குள் என் ஆத்துமா மேன்மைபாராட்டும், சிறுமைப்பட்டவர்கள் அதைக்கேட்டு மகிழுவார்கள். என்னோடே கூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள், நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக. நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார். அவர்கள் அவரை நோக்கிப்பார்த்துப் பிரகாச மடைந் தார்கள், அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை. இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண் களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார். கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார். கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள், அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கி யவான். கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவருக்குப் பயந்திருங்கள், அவருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்ல. சிங்கக் குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும், கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது. பிள்ளைகளே, வந்து எனக்குச் செவிகொடுங்கள், கர்த்தருக்குப் பயப்படுதலை உங்களுக்குப் போதிப்பேன். நன்மையைக் காணும்படி, ஜீவனை விரும்பி, நீடித்த நாட்களை அபேட்சிக்கிற மனு'ன் யார்? உன் நாவைப் பொல்லாப் புக்கும், உன் உதடுகளைக் கபட்டுவசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள். தீமையை விட்டு விலகி, நன்மை செய், சமாதானத்தை தேடி, அதைத்தொட ர்ந்துகொள். கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்க மாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது. தீமைசெய்கிறவர்களுடைய பேரைப் பூமியில் இராமல் அற்றுப்போகப்பண்ண, கர்த்தருடைய முகம் அவர்களுக்கு விரோதமாயிருக்கிறது. நீதிமான்கள் கூப்பி டும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர் களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார். நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீப மாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார். நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லா வற்றிலும் நின்று அவனை விடுவிப்பார். அவனுடைய எலும்புகளெல்லாம் காப்பாற்றுகிறார், அவைகளில் ஒன்றும் முறிக்கப் படுவதில்லை. தீமை துன்மார்க்கனை கொல்லும், நீதிமானை பகைக்கிறவர்கள் குற்றவாளிகளாவர். கர்த்தர் தமது ஊழியரின் ஆத்துமாவை மீட்டுக்கொள்ளுகிறார், அவரை நம்புகிற ஒருவன் மேலும் குற்றஞ் சுமராது. **- சங்கீதம் 34: 1-22**

*தொடரும்...*


SIVA SAKTI ASTROLOGY PSYCHIC CENTER



PANDIT: KUMAR SWAMY



Most Powerful Spiritual Healer
We can Handle any Problem
25 வருடங்கள் அனுபவமுள்ள மற்றும் 8 தலைமுறைகளாக ஜோதிடம் பார்பவர்
உலகத்தில் சூரிய சந்திர நவக்கிரக மகிமையினாலே
இன்ப துன்பங்கள், நன்மை தீமை பற்றி விபரம் குறுவார்
Remove Black Magic, Witchcraft, Obeya, Evil Spirits
Bad Luck & Jadoo & Give 100%, Life Long Protection
கை பார்த்து. முகம் பார்த்து அருள்வாக்கு சொல்லப்படும். Photo பார்த்து
ஜாதகம் பார்த்து, குறிப்புப் பார்த்து ஆரோக்கியம், மனநிம்மதி, லக்சுமி கடாட்சம் கிடைக்கவும்,
இராசி, நட்சத்திரம் பார்த்து நடந்தது, நடப்பது, நடக்கப்போவது பற்றிச் சொல்லப்படும்.
செய்வினை கோளாறு, பேய்பிசாசு தொந்தரவா, எதிரிகள் தொந்தரவா, கண் திருஸ்டி,
நாகதோசம், காதல் விவகாரங்கள், தொழில், மனை அபிவிருத்தி, வாகனப் பொருத்தம்,
காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கும், வேறு பிரச்சனைகளுக்கும் உடனடியாக
தீர்வு சொல்லப்படும்
எந்தப் பிரச்னையாக இருந்தாலும் 9 நாட்களில் தீர்வு காண்பார்
100% SATISFACTION GUARANTEED
Are you depressed & Lonely? All Religions welcome. 100% Guaranteed Result
416-726-4474
2649 Eglinton Ave, East, Scarborough, M1K 2S2
Rasi Silk upstair, (Brimeley & Eglinton.)

# மரண அறிவித்தல்

பிறப்பு:

09 - 03 - 1930



இறப்பு:

08 - 09 - 2020

## திரு. கணபதி நாராயணசுவாமி நாயக்கர்

(கொழும்பு அம்பாள் கபே – உரிமையாளர்)

தென் இந்தியா தூத்துக்குடி மாவட்டம் பரிவில்லிக்கோட்டையை பிறப்பிடமாகவும்,
கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த
திரு. கணபதி நாராயணசுவாமி நாயக்கர் அவர்கள்
08.09.2020 அன்று தென்னிந்தியா மதுரையில், இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருவம்மாள், மாரியம்மாள் (சரோஜா), மற்றும் சுப்புலட்சுமி ஆகியோரின் அன்புக் கணவரும்,

காலஞ்சென்ற நா. நிமல்கணபதிராஜ், மற்றும் நா. லோஹரீஸ்கந்தராஜ், நா. நகுலேஸ்வரராஜ், நா. ஹரிஹரன், நா. தயாளகணேஷ், நா. நடேஷ்வரராஜ், நா. விக்னேஷ்வரராஜ், ரா. கஸ்தூரிதேவி, சு. காந்திமதி, நா. கிரகலக்ஷ்மி, நா. கோனேஷ்வரி, க. திலகவதி, ர. லோகேஷ்வரி, ரா. லக்ஷ்மிபிரபா ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

*அன்னாரின் இறுதிகிரியைகள் 08.09.2020 அன்று இந்தியாவில் இல. 1, விஸ்வநாதபுரம், மதுரை-14 இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மகாத்மாகாந்தி நகர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.*

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்
ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**கனடாவில் தகவல் அறிய:**

**நா.லோகஸ்ரீஸ்கந்தராஜ்** - Mississauga: +94-77-410-3366 (WhatsApp)

**ர. லோகேக்ஷ்வரி** - Burlington: (647) 515-0954

Life Insurance
Don't think twice
Life Insurance Group Benefits
Critical Illness RRSP / RESP
Disability
Investments
iNFORCE LIFE Financial Services Inc.
RESP
Registered Education Saving Plans
40% - 20% Government Grant
Plus additional 15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay: 416.704.8074
TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com
வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
புதிய வகுப்புகள் ஆரம்பம்
October 2020
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services
ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1 (BETWEEN LAWRENCE & EGLINTON) TORONTO, ON. M1R 1P7
PARK PLAZA
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services
மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1275 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 11, 2020

# ஒன்ராரியோ பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும் போது ஆசிரியர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படமாட்டாது

## பல் மொழி பத்திரிகையாளர்கள் சந்திப்பில் ஒன்றாரியோ கல்வி அமைச்சர் Mr. Lecce உறுதியாகத் தெரிவிப்பு



(மிசிசாகாவிலிருந்து உதயன் அலுவல செய்தியாளர் விக்னேஸ்)



ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள ஆயரக்கணக்கான பாடசாலைகள் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 15ம் திகதி திறக்கப்படவுள்ள நிலையில் நேற்று முன்தினம் மாலை ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் Mr. Lecce அவர்கள் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள பல்லினப் பத்திரிகையாளர்கள் மற்றும் பிரதம ஆசிரியர்கள் ஆகியோர்களைச் சந்தித்து உரையாடினார் . மேற்படி பத்திரிகையாளர் சந்திப்பின் போது மாகாண பாராளுமன்றத்தின் எம்பிபி-க்கள் சிலரும் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள். அவர்கள் அனைவரும் பல்வேறு மொழிகளில் பேசும் ஆற்றல் கொண்டவர்களாக இருந்ததால், தங்கள் மொழி சார்ந்த பத்திரிகையாளர்களுக்கு மேலும் விளக்கங்களை அளித்தார்கள்.

அமைச்சர் மிகவும் உணர்வோடு அங்கு உரையாற்றினார் என்றே கூற வேண்டும். மாகாணத்தின் கல்வி அமைச்சர் என்ற வகையில் மிகவும் பொறுப்புக்கள் வாய்ந்த தலைமைத்துவத்தை தங்களுக்கு வழங்கும் மாகாண முதல்வர் டக் போர்ட் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் தனது கடமையை தான் சரியாகச் செய்ய முனைவதாகவும், எனினும் ஒன்றாரியோ மாகாணத்தின் பாடசாலைகளை மீளவும் திறக்கும் விடயத்தில் அரசாங்கம் எழுந்தமானமாக நடந்து கொள்ளவில்லை எனவும் கூறினார்.

"நாம் பாடசாலை மாணவ மாணவிகள் தொடர்பாக மட்டும் கவலைப் படவில்லை. ஆசிரியர்கள் பாடசாலை பணியாளர்கள் மற்றும் பெற்றோர்கள் தொடர்பாகவும் மிகுந்த அக்கறையுடனேதான் செயற்படுகின்றோம். பாதுகாப்பு மற்றும சுகாதார பாதுகாப்பு ஆகியவை தொடர்பாக இரண்டு மடங்கு முன்னெச்சரிக்கை நிறைந்த ஏற்பாடுகளை செய்துள்ள அதே வேளை மிகுந்த நிதி ஒதுக்கீட்டில் 600 தாதியர்களைகளையும் பாடசாலைகளுக்கு சமூகமளிக்கும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை பாடசாலைகளுக்கு அழைத்து வரும் பெற்றோர் தொடர்பாகவும் கவனமெடுத்து அதிக நிதியை ஒதுக்கியுள்ளோம்" என்றார்.

மேலும் பத்திரிகையாளர்களின் கேள்வி நேரத்தின் போது கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் முன்வைத்த கேள்விக்கும் அமைதியாகவும் காத்திரமாகவும் பதிலை வழங்கினார்.

"அமைச்சர் அவர்களே'! இந்த கொவிட்-19 தொற்று ஆரம்பமான காலத்திற்கு முன்பாக ஒன்றாரியோ ஆசிரியர்களின் தொழிற்சங்கங்கள் ஆசிரியர்களுக்கான வேதன உயர்விற்காகவும் மேலதிக சலுகைகளுக்காகவும் போராட்டம் நடத்தினார்கள். அந்த விடயமானது, தங்களுக்கும் தங்கள் அரசுக்கு மிகுந்த ஒரு சவாலாக அமைந்தது. இந்த விடயத்தில் எனது கேள்வி என்னவென்றால், மீண்டும் பாடசாலை திறக்கும் இந்த திட்டத்தின்படி பாடசாலைக்குத் திரும்பி வரும் ஆசிரியர்களுக்கு ஏதாவது மேலதிகக் கொடுப்பனவை உங்கள் அமைச்சு வழங்குமா?" என்று உதயன் பிரதம ஆசிரியர் தனது கேள்வியை முன்வைத்தார்.

அதற்கு பதிலளிக்க ஆரம்பிக்கும் போது அமைச்சர் Mr. Lecce அவர்கள் உறுதியாகச் சொல்லிய வண்ணம் பதிலைத் தொடர்ந்தார்.

"இல்லை! நிச்சயமாக இல்லை. அந்த வேலை நிறுத்தப் போராட்டம் வேறு வகையானது.

ஆனால் எமது ஆசிரியர்கள் பல விடயங்களைக் கவனிக்க வேண்டும். அவர்களுக்கு இவ்வளவு நாட்களும் எமது அரசாங்கம் எந்த வித தடையும் இன்றி அவர்க'ளுக்குரிய ஊதியத்தை முழுமையாக வழங்கியது. அத்துடன் ஒன்றாரியோ அதிகம் ஊதியம் பெறும் அரச ஊழியர்களாக ஆசிரியர்களே அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு பல சலுகைகளைச் செய்து வருகின்றோம்.

நாம் எமது அரசிற்கும் மத்திய அரசிற்கும் சமர்ப்பித்த செலவீனங்கள் தொடர்பான அறிக்கையில் ஆசிரியர்களுக்கு பாடசாலை மீளத்திறக்கப்படும் காலங்களில் மேலதிகக் கொடுப்பனவை வழங்கும் வகையில் நிதியைக் கேட்கவில்லை.

முக்கியமாக மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் நோய்த் தொற்றிலிருந்து எவ்வாறு எமது மாணவர்களையும் ஆசிரியர்களையும் பாதுகாத்து, மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்கி, அவர்களுக்கு அறிவூட்டும் நோக்கமே எமது அரசாங்கத்திற்கு உள்ளது. இவற்றை எமது ஆசிரியர்களும் அவர்களின் தொழிற்சங்கங்களும் நன்கு புரிந்து கொள்வார்கள் என்றே நான் கருதுகின்றேன்"

இவ்வாறு பதிலளித்தார் ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் Mr. Lecce அவர்கள்.

மேலும் பல பத்திரிகையாளர்கள் மற்றும் இந்திய மொழிகள் சார்ந்த தொலைக் காட்சி நிறுவனங்களின் தலைமைச் செய்தியாளர்கள் ஆகியோர் பல ஆரோக்கியமான கேள்விகளைக் கேட்டார்கள்.

அவர்களில் ஒருவர் அமைச்சரிடம் "இங்குள்ள சினிமா அரங்குகள் போன்றவற்றில் 50 பேரை மட்டுமே அனுமதிக்க சட்டங்களை உங்கள் அரசாங்கமே இயற்றியுள்ளது. இவ்வாறிருக்க ஒரு சிறிய வகுப்பறைக்கும் எவ்வாறு 25 மாணவர்களை அடக்குவீர்கள்? எவ்வாறு அவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பீர்கள்" என்ற ஒரு கேள்வி முன் வைக்கப்பட்டது.

அதற்கு பதிலளித் அமைச்சர் Mr. Lecce அவர்கள் "இந்த கேள்வி முக்கியமானதொன்று என்பதை நான் உணர்கின்றேன்.

ஆனால் நாம் திரையரங்குகள் போன்று சாதாரணமாக பாதுகாப்பு ஒழுங்குகளைச் செய்யவில்லை. எமது மாகாணத்தில் விசேட ஏற்பாடாக 600 தாதியர்களை நியமனம் செய்துள்ளோம்.

அத்துடன் எம்மோடு இந்த பாடசாலைகளை மீளத்திறக்கும் திட்டத்தின் பங்காளிகளாக உள்ள பல நிறுவனங்கள், உதாரணமாக பிரதேசங்களில் உள்ள சுகாதார அலுவலர்கள், அவர்களுக்கு கீழ் பணியாற்றும் பல்வேறு வகையான ஊழியர்கள் ஆகியோர் தயார் நிலையில் உள்ளார். தகுந்த முறையில் பாவிக்கக் கூடிய வகையிலி முகக் கவசங்கள் மற்றும் கையுறைகள். சுத்தம் செய்யும் இராயன கலவைகள் மற்றும் சிறுவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கக் கூடிய உபகரங்கள் ஆகியன தயார் நிலையில் ஒவ்வொரு பாடசாலையிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சுருங்கச் சொலலப்போனால் கல்விச் சபைகளுக்கு போதிய நிதியை வழங்கியுள்ளோம், மாணவர்களின் பாதுகாப்புக் கருதியே இதைச் செய்துள்ளோம். அத்துடன் எமது அரசும் எனது அமைச்சும் இரண்டு அல்லது மூன்று மடங்கு பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் மற்றும் தயார் நிலையிலும் உள்ளோம்" என்றார் அமைச்சர்.